திருத்தியன் வ.எ. கேணவி

JL
142391

…TERED No. M. 803.

20 FEB 1910
TANJORE
507/1910/II

# இந்தியன் லா கேஸ்.

சென்னை இராஜதானியில் தமிழ்ப்பாஷையறிந்த அனைவரும் விவகார நடபடிக்கைகளை வெளிதில் உணரும் பொருட்டு பிரசுரிக்கப்படும்.

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

புத்தகம் 1. | மாயவரம் 1909ஹு ஆகஸ்டு. | இலக்கம் 2.

## விஷயங்கள்


| | பக்கம். | | பக்கம் |
|---|---|---|---|
| தாராவிரதமாய்த்துறைமுவது | 41 | டாமேஜ் பட்டம் | 54 |
| இந்துலா | 46 | சாக்ஷிசட்டம் | 56 |
| மகம்மதியலா | 47 | செஷநுதாப்பாரீனம் | 57 |
| சி. பு. கோடு | 48 | காண்டிராக்டு ஆக்ட் | 58 |
| காணியதிதோஷசட்டம் | 52 | இன்சால்வன்ஸி | 67 |
| லெட்டர்ஸ் அவ் அட்மினிஸ்டிரேஷன் சட்டம் | 69 | வியாஜ்ஜியாதிருமான சட்டம் | 70 |
| கி. பு. கோடு | 72 | ஸிரக்பிராகடிவ்ஸ் ஆக்ட் | 71 |
| | | பெனல் கோடு | 78 |



மாயவரத்தினின்றும்

வக்கீல் A. கடேசபிள்ளையவர்களால் பிரசுரிக்கப்படும்.

வருட சந்தா ரூ. 3] [தனிப்பிரதி 6 அணா.

மாயவரம்

ஸ்ரீநுபிள்ளை அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS. REGISTERED 27 MAY 1910 MADRAS.
507
1910 / II
JL
Z2m, N09IL
N09.1.
142391

# ஸ்ரீ இந்தியன் லா கேஸஸ்.

சென்னை இராஜதானியில் தமிழ்ப்பாஷையறிந்த ஜனங்களுக்கு விவகார நுட்பங்களை யெளிதில் உணரும் பொருட்டு பிரசுரிக்கப்படும்.

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

புஸ்தகம் 1 | மாயவரம் 1909-ஹு ஆகஸ்டு | இலக்கம் 2.

## துராக்கிரமமாய் நுழைவதைக்குறித்து
## CRIMINAL TRESPASS I. P. C. 441, 442,

வேறொருவனுடைய ஸ்வாதீனத்திலிருக்கிற சொத்தினிடமாய் பிரவேசிக்கிறவனெவனாவது யாதொரு குற்றஞ் செய்யவேணுமென்று எண்ணங்கொண்டாகிலும் அந்தசொத்தைத் தன் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருப்பவனை பயப்படுத்தவேணுமென்றாவது, அவமதிக்கவேணுமென்றாவது சங்கடப்படுத்த வேணுமென்றாவது எண்ணங்கொண்டாகிலும், அந்த சொத்தினிடமாய்ப் பிரவேசிக்கிறபட்சத்திலும், அப்படிப்பட்ட சொத்தினிடமாய் நியாயமாகப் பிரவேசித்தபின்பு அப்படிப்பட்டவனை பயப்படுத்தவாவது அவமதிக்கவாவது சங்கடப்படுத்தவாவது எண்ணங்கொண்டாகிலும், யாதொரு குற்றத்தைச் செய்ய எண்ணங்கொண்டாகிலும், அக்கிரமமாய் அவ்விடத்திலிருக்கிற பட்சத்திலும், அவன் துராக்கிரமமாய் நுழைவதென்னும் குற்றத்தைச் செய்தவனாகிறான்,

மனிதர் வாசஞ்செய்வதற்கு உபயோகமான யாதொரு கட்டடம்—கூடாரம்—அல்லது கப்பலினிடமாயாவது தேவாராதனைக்காகிலும் சொத்தைப் பத்திரப்படுத்துவதற்காகிலும் உபயோகமான யாதொரு கட்டடத்திலாவது அக்கிரமமாகப் பிரவேசித்தாகிலும், அவ்விடத்திலேயிருந்துகொண்டாகிலும் யாவனாவது துராக்கிரதமாய் நுழையவதென்னுங் குற்றத்தைச் செய்வானாகில், அவன் வீட்டினிடமாய் நுழைவதென்னுங் குற்றத்தைச்செய்தவனாகிறான்.

அர்த்தம்:—வீட்டினிடமாய் நுழைவதென்னுங் குற்றஞ் செய்யப்பட்டதென்று நிச்சயிப்பதற்கு—துராகிரதமாக நுழைகிறவனுடைய உடம்பில் எவ்வளவாவது உள்ளே பிரவேசித்தால் அதுவே போதும்.

துராக்கிரதமாய் நுழைவதென்னுங் குற்றத்தைச் செய்கிறவன் மூன்று மாசத்திற்கு அதிகப்படாமல் இருவகைக்காவலில் எதிலாகிலும் வைக்கப்படுவான் அல்லது ஐந்நூறு ரூ வரையில் அபராதத்திற்குள்ளாவான் அல்லது இரண்டு தெண்டனைக்கு உட்படுவான்.

வீட்டினிடமாய் நுழைவதென்னுங் குற்றத்தைச் செய்கிறவன் ஒரு வருஷத்திற்கு அதிகப்படாமல் இருவகைக் காவலில் எதிலாகிலும் வைக்கப்படுவான், அல்லது ஆயிரம் ரூபாய்வரையில் அபராதத்திற்குள்ளாவான் அல்லது இரண்டு தெண்டனைக்கும் உட்படுவான்.

வியாக்யானம்

சொத்து:— ஸ்தாவர சொத்தேயன்றி ஜங்கம்சொத்தல்ல, ஒருஸ்தலத்தில் மீன்பிடிக்கும்பாத்தியம் ஒருவருக்கிருக்கிறது அதில் மற்றொருவர் பிரவேசித்து மீன்பிடிப்பது இந்த செக்ஷன்படி குற்றமாகாது (இலாரி 2 கலகத்தா 354) சர்க்காரில் ஒடத்துறை ஒன்று ஏற்பட்டிருக்க அதற்கு 2 ம்மைலுக்கப்பால் வேறொருவன் ஒடம் விடுவதும் இந்த செக்ஷன்படி குற்றமாகாது (இ.லா.ரி. 1 அலகபாத் 527)

ஸ்வாதீனம்:—ஸ்வாதீனம் என்பது யாரால் ஆக்கிரமி



க்கப்படுகிறதாகச்சொல்லப்படுகிறதோ அவரைத்தவிர வேறொருவருடைய ஸ்வாதீனத்திலிருந்திருக்கவேண்டும், நேரான சுதந்தரபாத்தியமுடையவனாயிருக்கவேண்டும் (இ.லா.ரி 12 அலகபாத் 458 ஒருவனுக்கு ஒரு சொத்து கிரமமான பாத்தியதையுடன் கிடைக்காவிட்டாலும் அச்சொத்தில் வேறொருவன் பிரவேசிப்பது இந்த செக்ஷன்படி குற்றமாகலாம். (சர்வன் சிங் 11 வீக்லி ரிபோர்ட்டார் 11

கூட்டுஸ்வாதீனம்:—அவிபக்த குடும்பபாகஸ்தன் அக்குடும்பப்பொது வீட்டில் பிரவேசிப்பது குற்றமாகாது; அவ்வீட்டிலுள்ள ஒரு அறையில் ஒரு பாகஸ்தன் தனக்குள்ள சாமான்களை வைத்திருந்தால் அதில் பிரவேசிப்பது குற்றமாகும் (15வீக்லிரிப்போர்ட் 6) அவிபக்த குடும்ப வீட்டில் ஒருபாகஸ்தன் அனுமதிப்படி வேறொருவன் பிரவேசிப்பது குற்றமாகாது (6பெங்காள, லாரிப்போர்ட்ஸ் அப்பீல் 80).

எண்ணம்:—இந்த செக்ஷன்படி குற்றமாவதற்கு ஒருவன் ஒரு காரியஞ் செய்யும்போது அவனுடைய எண்ணம் எப்படியிருந்ததென்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். ஒருவனுடைய செய்கையினால் என்னவுண்டாகக்கூடியதோ அதைக்கொண்டு குற்றம் சுமத்தக்கூடாது (இ. லா. ரி. 19 சென்னை 240 ருயப்படையாச்சி) ஒருவன் மற்றொருவனுடைய நிலத்தில் பிரவேசிப்பதை சிவில் கோர்ட்டு மூலமாய் தடுக்கக்கூடியதாகவாவது அல்லது அவர்களால் சிக்ஷிக்கக்கூடியதாகவாவது இருக்கும்பட்சத்தில் அதைப்பற்றிக்கிரிமினல் கோர்ட்டில் நடவடிக்கை நடத்தக்கூடாது (கிரிமினல் ரூலிங்ஸ் பம்பாய் ஹைகோர்ட் 1883ஆம் 43 ரு.

சங்கடம்:—சாதாரணமாயொருவருக்கு சங்கடமுண்டுபண்ணக் கூடியதென்று நினைக்கத்தகுந்த காரணங்களிருந்தால் அதற்குத்தான் சங்கடம் என்றுபெயர்; எவனாவதொருவனுக்குத்தனிமையில் எந்தசங்கடமாவதுண்டுபண்ணினால் அது சங்கடமாகமாட்டாது (இ. லா. ரி. 2 அலகபாத் 465, 467, கோவிந்த பிறசாத்) ஆக்கிரமிப்பவன் ஒருவன் தான் செய்யும் செய்கை கண்டுபிடிக்கப்பட்டால் பிறருக்குச் சங்கடமுண்டுபண்ணுமென்று யுக்திகளிட்டிருந்தாலும் அவன் அந்த எண்

ணத்துடன் செய்தானென்று நினைக்கக்கூடாது (இ. லா. ரி. 19 சென்னை 240). ஒருவன் துராகிரதமாய் பிரவேசிப்பதனுல் சங்கடமுண்ணவேமென்றவெண்ணமிருப்பது மட்டில் போதுமானதல்ல, அவ்வெண்ணம் இந்த செக்ஷன்படி குற்றமாகாது (4 பம்பாய் லா ரிப்போர்ட் 280 லெக்ஷ்மண் செகுனாத்).

ஸ்வாதீனத்திலிருக்கும் எவனுவது—எவன் ஸ்வாதீனத்திலிருந்து சொத்து ஆக்கிரமிக்கப்பட்டதோ அவன்தான் வழக்கிடவேண்டுமென்பதவசியமில்லை யென பம்பாய் ஹைகோர்ட்டாரவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 21 பம்பாய் 536 கேசவலால் ஜே கிருஷ்ண, கல்கத்தா ஹைகோர்ட்டாரவர்கள் எவன் ஸ்வாதீனத்திலிருந்ததோ அவன் தான் வழக்கிடவேண்டுமென்றும் அவன் கி. பு. கோடு 345வது செக்ஷன்படி கேசை ருஜிசெய்யக்கூடியவனுகவிருக்கவேண்டுமென்றும் தீர்ப்பு செய்திருக்கிறார்கள் (இ. லா. ரி. 22 கல்கத்தா 23, 180 சண்டிபிறசாத்—எவான்ஸ்

நல்லெண்ணத்துடன் கொண்டாடும் பாத்தியம்.—ஸ்வாதீனத்திலிருக்கிற வொருவனுக்கு பயப்படுத்தவாவது, அவமதிக்கவாவது, சங்கடப்படுத்தவாவது வேறெந்த குற்றஞ்செய்யவாவது எண்ணங்கொள்ளாமல் நல்ல யெண்ணத்துடன் பாத்தியங்கொண்டாடி பிறர் வசமுள்ள சொத்தில் ஆக்கிரமிப்பாராகில் அவரை கிரிமினல் ஆக்கிரமிப்பு என்னுங் குற்றத்துக்குத் தெண்டிக்கக்கூடாது (இ. லா, ரி. ? அலகபாத் 10 புந்தசிங்).

துராகிருதமாக நுழைதல் என்னுங்குற்றங்கள்.— ஒரு கண்ணியமுள்ள குடும்பஸ்திரியின் படுக்கை அறையில் நடுராத்திரியில் அன்னியனொருவன் யாதொரு காரணமன்னியிலும் எவராலுங் கூப்பிடப்படாமலும் பிரவேசிக்கிறான்; அவனையடிக்க எத்தனித்தகாலத்தில் பலாத்காரஞ் செய்துகொண்டு ஓடிப்போகிறான். இந்தப்படி அவன் அவ்வீட்டில் பிரவேசித்தது இந்த செக்ஷனில்க்கண்டபடி குற்றஞ்செய்வதற்குத்தானென்று கோர்ட்டார் ஊகிக்கவேண்டிய தவசியம். (இ. லா. ரி. 16 கல்கத்தா 657, 22 கல்கத்தா 391); சென்னை ஹைகோர்ட்டார் இதற்கு விரோதமான தீர்ப்பு செய்திருக்கிறார்கள் (19 சென்னை 240 குயப்படையாச்சி). சலக்குழிஸ்தலத்தில் சில பாகத்தில் வெளிவெடுத்து



OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 27 MAY 1910 MADRAS.

அதில் சாகுபடிசெய்ய யெத்தனிப்பது இந்த செக்ஷன்படி குற்றமாகும் (6 சென்னை ஹைகோர்ட்டு ரிப்போர்ட்ஸ் அப்பில் 25.) ஒரு சொத்தைப்பற்றி சிவிலில் வழக்கிட்டிருக்கும்போது அச்சொத்து ஸ்வாதீனமுள்ளவனுடைய அனுமதியன்னியில் அந்நிலத்தை யளப்பதற்காக பிரவேசிப்பதுங் குற்றமாகும் (16 கல்கத்தா 716).

துராகிரதமாக நுழைதலென்னுங் குற்றமாகாத கேஸ்கள் இந்த செக்ஷனில்க்கண்ட கெட்டவெண்ணங்கள் யாதொன்றுமன்னியில் ஒரு நாடகசாலையில் ஒருவன் டிக்கெட் வாங்காமல் பிரவேசிப்பது குற்றமாகாது (6 பம்பாய் ஹைகோர்ட்டு ரிப்போர்ட்டு 6). ஒரு மைதானத்தில் எவரும்பிரவேசிக்கக்கூடாதென்று முனிசிபல் கமிஷனர்கள் உத்திரவு செய்திருக்கிறார்கள்,) அவ்வித வுத்திரவு செய்ய அவர்களுக்கு அதிகாரமில்லை, அந்த மைதானத்தில் ஒருவன் வண்டியை யோட்டுவது குற்றமாகாது (4 சென்னை 243 மாரிமுத்து). ஒருவன் லோகல்பண்டு சந்தைக்கு கொடுக்கவேண்டிய வரியை கொடாமல் ஏமாத்தவேண்டியதற்காக அச்சந்தையில் பிரவேசித்து சாமான்களை விற்கிறான், இவ்விதஞ் செய்வதுங் குற்றமாகாது (5 சென்னை 382) ஒருவன் மற்றொருவன் நிலத்துக்குச் சமீபத்திலிருக்கிற ஒரு மானைச்சுடுகிறான், அதைக்கொல்வதற்காக அந்நிலத்துக் குடையவனுடைய தடையை மீறி அவன் நிலத்தில் பிரவேசிக்கிறான், இது குற்றமாகாது. (4 கல்கத்தா 837.) ஒருவன் மற்றொருவன் நிலத்திலிருந்து கொண்டு சூதாடி சச்சரவு செய்கிறான், இது இந்த செக்ஷன்படி குற்றமாகாது (6 கல்கத்தா 579). ஒருவனை அவன் வசமிருந்த சொத்திலின்றும் கோர்ட்டு பிராஸஸ் மூலமாய் விலக்கி விடுகிறார்கள், அவன் மறுபடியும் அந்நிலத்தில் பிரவேசித்து அதிலிருப்பதும், அல்லது அச்சொத்துவேறொருவருக்கு ஸ்வாதீனப்படுத்தப்பட்ட பிறகு அதில் தனக்கு தனிமையிலாவது வேறு பேர்களுடன் கூட்டாக வாவது சொந்தமிருப்பதாக பாத்தியங் கொண்டாடுவது குற்றமாகாது (2 அலகபாத் 465). சர்க்காரி மேற்பட்ட ஓடத்துறைக்கு மூன்று மயிலுக்கப்பால் வேறொருவன் கூலிக்கு ஓடம் விடுவது குற்றமாகாது (1 அலகபாத் 527). ஜமீன் குடியானவனொருவன் தன்னிலத்தை விட்டு விட்டுப் போய்விடுகிறான், ஜமீன்தார் அந்நிலத்தை அக்கிரம

மாக ஸ்வாதீனஞ்செய்துகொள்ளுகிறார், இந்த 441-வது செக்ஷனில்கண்ட குற்றங்களிலேதையாவது செய்வதற்காக ஜமீன்தார் ஆக்கிரமித்துக்கட்டிக்கொண்டா ரென்ற ருஜாக்கள் ஏற்பட்டாலன்றி இவா சொத்தை ஸ்வாதீனஞ்செய்துகொண்டது குற்றமாகமாட்டாது. (26 அலகாபாத் 194 ஜங்கிசிங்).

## இந்தியன் லா கேஸஸ்

### ஹிந்து லா.

சம்பந்தநிர்ணய பத்திரிகை வழியாக அங்கீகரிக்கப்படலாமென்பது:— இராமச்சந்திரன் என்ற ஹிந்து ஒருவர் தனது இளைய குமாரத்தி திருலோகதாரணி யென்பவளை கிருஷ்ணகோபால் பக்ஷிக்கு விவாகஞ் செய்துகொடுப்பதாகக் கேட்டதில் அவர் தனக்கு ஏதாவது சொத்துக்கள் கொடுத்தாலன்றி அப்பெண்ணை விவாகஞ் செய்வதில்லை யென்றார். அதனால் இராமச்சந்திரன் தனக்குள்ள சில சொத்துக்களை தன்னுடையவும் தன்னுடைய பெண்ஜாதி யுடையவும் ஜீவதிசைக்குப்பிறகு கிருஷ்ணகோபால் அடைகிறதென்று சம்பந்தநிர்ணயபத்திரிகை யென்ற கடிதம் எழுதிக்கொடுத்தார். அதைப்பெற்றுக்கொண்டபின் கிருஷ்ணகோபால் மேற்சொன்ன திருலோகதாரணியை விவாகஞ் செய்தார். இராமச்சந்திரனும் அவருடைய மனைவியும் இறந்தபின்பு ஷை சம்பந்தநிர்ணயபத்திரிகையை டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் தாகல்செய்து அதில் கண்ட சொத்துக்களுக்கு வார்சு சர்டிபிகேட் கொடுக்கும்படி மனுக்கொடுத்தார். ஷை இராமச்சந்திரனுடைய மூத்தகுமாரியின் வார்சுகள் ஷை கடிதம் உயிலாகமாட்டாதென்றும் அது சட்டப்படி செல்லாதென்றும் ஆக்ஷேபித்தார்கள். அது உயிலாகுமென்று டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் லெட்டர்ஸ் அவ் அட்மினிஸ்டிரேஷன் அதிகாரம் கொடுத்துவிட்டார்கள். இதைப்பற்றி பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்கள்.

அப்பீல் வாதிக்காக வக்கில் பாபு துவாரகாநாத் சக்கரவர்த்தி அவர்களும் அப்பீல் பிரதிவாதிக்காக வக்கில் பாபு கோராச்சந்திர சர்க்கார் அவர்களும் ஆஜராகி ஜஸ்டிஸ் ராம்பினி துரையவர்கள் ஜஸ்டிஸ் ஷார்புல்டின் அவர்கள் இவர்கள் முன்பாக வாதங்கள் செய்ததில் தாவா சம்பந்த நிர்ணய பத்திரிகை ஹிந்துலாப்



படி செல்லுபடியுள்ளதென்றும் அதில் சாக்ஷிகள் போடப்பட்டிருப்பதால் அது உயிலாக அங்கீகரிக்கப்படலாமென்றும் டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் செய்த உத்திரவு உறுதிசெய்யப்பட்டது: 36 கல்கத்தா 149 டின்தாரணிதேவி அ. மனுதார்—கிருஷ்ண கோபால் பக்ஷி அ. கவுண்டர் மனுதார்.

## மகம்மதிய லா.

தலாக் சொல்லுதலும் டவர்தொகை வசூலிக்கக் காலாவதி தோஷமும்:—

புல்சண்டி என்னும் மகம்மதிய ஸ்திரீ தன்னை மோசந் சவுத்திரி என்பவர் சாஸ்திரோக்தமாக விவாகஞ் செய்ததாகவும் தனக்குக் கொடுபடவேண்டிய டவர் தொகைக்கு காபின் என்னும் தஸ்தாவேஜி எழுதிவைத்திருப்பதாகவும் அவர் இறந்து விட்டபடியால் அவர் வார்சுகள் நசாப் அலிசவுத்திரி வகையறா விடமிருந்து கிடைக்கவேண்டுமென்று 1905-ளு பிப்ரவரி மீ 15உ வழக்கிட்டாள்.

வாதி தன் புருஷன் வீட்டை விட்டு விட்டு 1897-ளுத்தில் ஓடிப்போய் விட்டதாகவும் அதனால் அவள் புருஷன் தகுந்த சாக்ஷிகள் முன்னிலையில் தலாக் சொல்லிவிட்டதாகவும் வாதி பின்பு அவள் புருஷனுடன் வாழவே யில்லையென்றும் அதனால் வாதி தன்னுடைய டவர் தொகை பாத்தியதைகளை யிழந்துவிட்டாளென்றும் வாதியின் தாவாவுக்கு காலாவதி தோஷ மேற்பட்டிருக்கிறதென்றும் பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள்

பிரதிவாதிகள் சொல்லும் தலாக் வாதியின் முன்னிலையில் சொல்லப்படாததால் அது மகம்மதிய லாப்படி செல்லுபடியற்றதென்றும் வாதியின் தகப்பன் அந்த தலாக்கை யொப்புக் கொண்டது வாதியை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தமாட்டாதென்றும் வாதியின் தாவாப்படி கீழ்கோர்ட்டார் தீர்ப்பு சொல்லிவிட்டார்கள். இதைப்பற்றி பிரதிவாதிகள் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்ததில் வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாக வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இத்தீர்ப்பு சட்ட விரோதமானதென்று வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தாள்

வாதிக்காக வக்கீல் பாபு பிபன் சந்திரபாலிக் அவர்களும் பிரதிவாதிக்காக வக்கீல் மோஸ்லி ஷாம் சல்ஹூடா அவர்களும் ஆஜராகி ஜஸ்டிஸ் ஸ்டெபன் துரையவர்கள் டாஸ் துரையவர்கள் இவர்கள் முன்பாக விவாதங்கள் செய்ததில் தலாக் தருந்த சாக்ஷிகள் முன்னிலையில் சொல்லப்பட்டு அது விபரம் வாதிக்கு வுடனே அறிவிக்கம்பட்டிருப்பதால் அவ்வித தலாக் மகம்மதிய லாப்படி செல்லுபடியுள்ள தென்றும் வாதிக்கு நேரில் அது சொல்லவேண்டிய அவசிய மில்லையென்றும் வாதி அந்த தலாக் தேதி முதல் தன் புருஷனிடமில்லாமல் தன் தகப்பன் வீட்டிலிருந்துவருவதால் வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதென்றும் வாதியின் அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது, 36 கல்கத்தா 184. புஸ்சன்டு அ. வாதி— நசாப் அலிசவுத்திரி அ: பிரதிவாதி.

## சிவில் புரிஸிஜர் கோடு.

கோர்ட்டு டிபாசிட்டிலிருக்கிற தொகை பங்குவீதமாகப் பிரித்துக்கொடுக்க செய்யப்படும்உத்திரவின்பேரில் அப்பீல் இல்லையென்பது — ஜெகதேச்சந்திரஷகா என்பவர் தனக்கு நிசான்பால், ரகுனாத், மெய்குநாத், கிருஷ்ணதைபால் இந்நால்வரும் கொடுக்கவேண்டிய தொகைக்காக வழக்கிட்டதில் அத்தொகைக்கு தீர்ப்பாவதற்கு முந்தியே அவர்களுடைய ஜங்கமசொத்துக்களை ஜப்திசெய்தார், கிருபாநாத்கா, சனாதன்ஷகா இன்னுமொருவர் இவர்கள் மூவரும் மேற்கண்ட நால்வர் பேரிலும் ஏற்கனவே டிக்கிரிகள் பெற்றிருந்ததால் ஷை ஜங்கமசொத்துக்கள் ஏலவிற்று முதல்த்தொகையினின்றும் தங்களுக்கு வீதாசாரத்தொகை கொடுபடவேண்டுமென்று சி. பு. கோடு 295-வது செக்ஷன்படி மனுக்கொடுத்தார்கள்.

ஷை கிருபாநாத் சேர்ந்து மேற்கண்ட நால்வர் பேரிலும் ஜாயிண்டு டிக்கிரிபெற வில்லையென்றும், ஒருவர் சில பிரதிவாதிகள் பேரிலும் மற்றவர் வேறு பிரதிவாதிகள் பேரிலும் தனித்தனி டிக்கிரிகள் பெற்றிருப்பதால் அவர்கள் கொடுத்த மனு சட்டப்படி செல்லுபடியற்று தென்று கீழ் கோர்ட்டார் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் மனுதாரர்கள் கீழ்கோர்ட்டார் செய்த வுத்திரவு ரத்துசெய்யப்பட்டு தங்களுக்கு வீதாசாரத்தொகை கொடுபடும்படி யுத்திரவு செய்யப்படவேண்டுமென்று வாதி ஜெகதேச்சந்திரஷகாவை மட்டில் அப்பீல் பிரதிவாதி கவுண்டர் மனுதாரராகச்சேர்த்து அப்பீல் செய்திருந்தார்கள். அந்த அப்பீல் விசாரணை தேதியில் கவுண்டர் மனுதார் வாதி ஆஜரில்லாததால் அப்பீல் மனுதார்கள் கேட்டுக்கொண்டபடி தீர்ப்பு செய்யப்பட்டது. வாதிதனக்குக் கிடைத்த நோட்டீசில் விசாரணை கெடுத்தேதி நன்றாய்த் தெரியாததினால் தான் விசாரணைக்கு வரத்தவறிவிட்டதாகவும் ஷை அப்பீல் விசாரணை மனுப்படியுஞ் செய்யவேண்டுமென்றும் வாதி மனுக்கொடுத்தார். அந்த மனுவும் நிராகரிக்கப்பட்டது. அதனால் கீழ் அப்பீல் கோர்ட்டார் செய்த வுத்திரவு ரத்துசெய்யபடவேண்டுமென்றும் சி. பு. கோடு 295-வது செக்ஷன்படி செய்யப்படும் உத்திரவின் பேரில் அப்பீல் செய்ய சட்டமில்லையென்றும் ஹைகோர்ட்டில் வாதி அப்பீல் செய்தார்.



பாபு உபேந்திரனத்லால் ரூய் அவர்கள் அப்பீல் வாதிக்கும் பாபு சரத் சந்திரப்ரசாக் அவர்கள் அப்பீல் பிரதிவாதிக்ளுக்கும் ஆஜராகி ஜஸ்டிஸ் காக்ஸி துரையவர்கள் ஜஸ்டிஸ் பெல் துரையவர்கள் இவர்கள் முன்பாக வாதங்கள் செய்ததில் சி, பு கோடு 588-வது செக்ஷனில்க்கண்ட வுத்திரவுகளைப்பற்றிமட்டில் அப்பீல்ச்செய்யலாமேயன்றி மற்றவுத்திரவுகளைப்பற்றி அப்பீல் செய்வது சட்டவிரோதமானதென்றும், கீழ்கோர்ட்டார் செய்த வுத்திரவு 244-வது செக்ஷன்படிக்கல்லவென்றும் இவ்வித கேஸ்களில் ஹைகோர்ட்டார் பிரவேசித்து வுத்திரவு செய்ய சி. பு. கோடு 622-வது செக்ஷன்படி தங்களுக்கு அதிகாரமிருக்கிற தென்றும், 28 பம்பாய் 458 ரூலிங்கை யனுசரித்துத் தீர்ப்பு செய்தார்கள்.

36 கல்கத்தா 130 ஜகதேச்சந்திரஷகா அ. வாதி. கிருபாநாத் ஷசா அ. பிரதிவாதி.

6. கிரமப்பிசகான நடவடிக்கைகள் நடத்தி யேற்பட்ட தீர்ப்புகளை ரத்துசெய்ய ஹைகோர்ட்டாருக்குள்ள அதிகாரம் :—
பழனியப்பசெட்டி யென்பவர் தனக்கு 3 ஸ்தலங்கள் பாத்திய முள்ளதாயிருப்பதாகவும், அப்பாத்தியங்களை ரெங்கையதாஸ் நாயடு மறுத்து அந்நிலங்களில் பிரவேசிக்க எத்தனப்படுவதாகவும், அதனால் தனக்கு அந்நிலங்களிலுள்ள பாத்தியங்களை ஸ்தாபித்து பிரதிவாதி அவைகளில் பிரவேசிக்காதபடி இன்ஜெக்ஷன் கொடுக்கவேண்டுமென்றும், டை முனிசிப் கோர்ட்டில் வழக்கிட்டார். அந்த நிலங்களுக்கு பிளான் ஒன்று வாதி தன் பிராதுடன் தாக்கல் செய்திருந்தார். அதை பிரதிவாதி இந்த கோர்ட்டில் ஆக்ஷேபிக்கவில்லை. வாதியின் தாவாப்படி டிஸ்டிரிக்ட் முனிசிப் தீர்ப்பு செய்துவிட்டபடியால் பிரதிவாதி அதைப்பற்றி டிஸ்டிரிக்ட்கோர்ட்டில் அப்பீல் செய்தார். வாதி தாகல் செய்த பிளான் [illegible]வில்லை யென்று டிஸ்டிரிக்ட் ஜட்ஜி கீழ்கோர்ட்டு தீர்ப்பை ரத்துசெய்து கேசை மறுவிசாரணை செய்யும்படி அனுப்பினார்கள். டிஸ்டிரிக்ட் முனிசிப் மறுபடியும் கேசை விசாரித்து வாதிபட்சமாகவே தீர்ப்பு செய்தார். இதைப்பற்றி பிரதிவாதி அப்பீல் செய்ததில் டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் கீழ் கோர்ட்டு 2-வது தீர்ப்பையும் ரத்து செய்து வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இத்தீர்ப்பு ரத்து செய்யப்படவேண்டுமென்று வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

அ. வாதியின் வக்கீல் கே. பாலமுகுந்த அய்யர் அவர்களும் கே. ஜெகன்னாத அய்யரவர்களும், பிரதிவாதியின் வக்கீல் கனம் அட்வொகேட் ஜெனரல் அவர்களுக்காக வி. புருஷோத்தம அய்யர் அவர்களும், ஆனரபில் ஜஸ்டிஸ் மன்ரோ துரையவர்கள் ஜஸ்டிஸ் அபடர்ரஹிம் அவர்கள் இவர்கள் முன்பாக வாதங்கள் செய்ததில் டிஸ்டிரிக்ட் முனிசிப் பிரிலிமினரி விஷயமாக தீர்ப்பு செய்யாததால் அத்தீர்ப்பை டிஸ்டிரிக்ட் ஜட்ஜி ரத்து செய்து சி. பு. கோடு 562-வது செக்ஷன்படி புனர்விசாரணை செய்யும்படி அனுப்பியது சட்ட விரோதமென்றும், அது கிரமப்பிசகான நடவடிக்கையாயிருப்பதுமன்றி சட்டவிரோதமானதாயுமிருப்பதாகவும் அதற்கு பரிகாரம் சி. பு. கோடு 578 வது செக்ஷன்படி சொல்லக்கூடா



தென்றும், அவ்விதசட்டவிரோதமான உத்திரவு கக்ஷிக்காரர்களின் சம்மதியின்பேரிலாவது, கௌனக்குறைவினாலாவது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக விருந்தாலும் வாதி அதுவிஷயமாய் சி. பு. கோடு 588-வது செக்ஷன்படிக்காவது டிஸ்டிரிக்ட் ஜட்ஜி கீழ்கோர்ட்டுக்கு ரிமாண்டு உத்திரவு அனுப்பியதைப் பற்றியாவது அப்பீல் செய்யாதிருந்தது வாதி சம்மதித்ததாகவாவது வேண்டாமென்று விட்டு விட்டதாகவாவது ஆகமாட்டாதென்றும், டிஸ்டிரிக்ட் முனிசிப் 2-வது செய்த தீர்ப்பும், டிஸ்டிரிக்ட் ஜட்ஜி முதலில் செய்த ரிமாண்டு உத்திரவும், அவர் கடை செய்த தீர்ப்பும், ரத்து செய்யப்பட்டதுடன் பிரதிவாதி முதலில் செய்த அப்பீல் 1902 ஹூ 48 நெ. ரைபயிலில் வைத்துக் கொண்டு தீர்ப்பு செய்யும்படி உத்திரவு செய்தார்கள்.

32 சென்னை 83 பழனிசெட்டி அ. வாதி—ரெங்கய்யதாஸ் நாயடு அ. பிரதிவாதி.

7. விதந்துபேரில் ஏற்பட்ட பெந்தக டிக்கிரியும் அனந்தரவார்சுபாத்தியமும் :—
முராமத் ரெகுபன்சா என்ற விதந்து பிரதிவாதிக்கு ஒரு பெந்தக பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தாள். அத்தொகை கொடாததால் பிரதிவாதி வழக்கிட்டு 1905 ஹூ எப்பிரல் மீ 1-உ டிக்கிரிபெற்றார். அந்த டிக்கிரி நிறைவேற்றப்படுவதற்கு முந்தி, டை விதந்து இறந்துவிட்டபடியால் அவள் புருஷனுக்கு நெருங்கிய அனந்தரவார்சுகளாகிய ஜகன்னாத்சிங் வகையறாவை அவ்விதந்துவுக்கு வார்சுகளாகச் சேர்த்து டிரான்ஸ்வர் அப்பிராபர்டி ஆக்ட்டு 89-வது செக்ஷன்படி டிக்கிரி ஊர்ஜிதசெய்வதற்காக நிறைவேற்றினார். டை டிக்கிரிகடனுக்கு தாங்கள்கட்டுப்பட்டவர்களல்லவென்றும் அக்கடன் விதந்துவின் சொந்தப்பிரயோஜனத்துக்கு வாங்கப்பட்டதென்றும், பெந்தகசொத்தின்பேரில் நிறைவேற்றக்கூடாதென்றும், ஜெகன்னாதசிங் வகையறா ஆக்ஷேபித்தார்கள். அவர்கள் ஆக்ஷேபனைகள் டிக்கிரி நிறைவேற்று நடவடிக்கையில் அங்கீகரிக்கத்தக்கதில்லையென்று உத்திரவுசெய்ததின்பேரில் வாதிகள் ஜெகன்னாதசிங் வகையறா டை பெந்தக டிக்கிரி ரத்துசெய்யப்படவேண்டுமென்று பிரதிவாதி [illegible]

கிழக்கிட்டார்கள். வாதியின் தாவாப்படி கீழ்கோர்ட்டார் தீர்ப்பு செய்துவிட்டார்கள். இதைப்பற்றி பிரதிவாதி டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில் கீழ்கோர்ட்டார் டிக்கிரி நிறைவேற நடவடிக்கையில் செய்தவுத்திரவின்பேரில் சி. பு. கோர்டு 244-வது செக்ஷன்படி வாதி அப்பீல் செய்யவேண்டியதேயன்றி அசல் வழக்கிட்டது செல்லாதென்று வாதிகளின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இத்தீர்ப்பு சட்டவிரோதமானதென்று வாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல்செய்தார்கள்.

வாதிகளுக்காக வக்கீல்கள் முன்ஷி இஸ்வரசரன் அவர்கள் பாபு கோகல் கிஷன் அவர்கள் இவர்களும் பிரதிவாதிக்காக வக்கீல் சனம் பண்டிதர் சுந்தர்லால் முதலியவர்களும் ஆஜராகி சீவ் ஜஸ்டிஸ் சர்ஜான் ஸ்டான்லீ னயிட் துரையவர்கள் ஜஸ்டிஸ் பனர்ஜி அவர்கள் இவர்கள் முன்பாக வாதங்கள் செய்ததில் அனந்தர வார்சுகளாயுள்ளவர்களை கிதந்துவின் வார்சுகளாகச்சேர்த்து டிக்கிரி நிறைவேற்றப்பட்டால் அவர்கள் தங்களுக்குள்ள பாத்தியங்களை அசல்வழக்கில் ஸ்தாபித்துக்கொள்ளவேண்டியதேயன்றி டிக்கிரி நிறைவேறு நடவடிக்கைகளில் ஸ்தாபித்துக்கொள்ள சட்டமில்லையென்று வாதிகளின் அப்பீலை யங்கீகரித்து கீழ் அப்பீல் கோர்ட்டாருடைய தீர்ப்பைரத்துசெய்து அக்கோர்ட்டார் சாராம்சங்களில் பிரவேசித்து தீர்ப்பு செய்யும்படி யுத்திரவுசெய்தார்கள்.

31 அலகபாத் 45 ஜெகன்னாத்சிங் வகையரா. அ. வாதிகள்—ஷியோகுலாம்சிங். அ. பிரதிவாதி.

---

## காலாவதிதோஷ சட்டம்.

---

3. நஷ்டபரிகாரத்துக்கு காலாவதி தோஷம்:— வாதிஜாடுநாத் டாண்புட்டுக்கும் முதல் பிரதிவாதி ஹரிஹருக்கும் சில வழக்குகளிருந்ததில் ஹரிகர் தோர்வை அடைந்துவிட்டார். அதன்பேரில் முதல் பிரதிவாதி, இந்த விரோதத்தை முன்னிட்டு வாதியின் சில நிலம் 8-ம் பிரதிவாதிக்கிச்சொந்தமாயிருந்தது போலும், அதை 9-ம் பிரதிவாதி குத்தகைக்கு பயிரிட்டதுபோலும் அந்த குத்தகைத்தொகை கொடாமலிருந்ததுபோலும், 9-ம் பிரதிவாதி பேரில் 8-ம் பிரதிவாதி வழக்கிட்டு டிக்கிரிபெற்று அக்கடனுக்காக வாதிக்குச்சொந்தமான ஷை நிலத்திலுள்ள மகசூலை ஜப்திசெய்து கோர்ட்டு பிராஸஸ் மூலமாக 1900 ஹு டிஜம்பர் மீ த்தில் அறுவடை செய்து மகசூலைக் கொண்டுபோய்விட்டார்கள். இவ்விதம் அக்கிரமமாகவும் மோசடியாகவும் வாதியின் நிலத்திலுள்ள மகசூலையரு[illegible]செய்துகொண்டு போனதற்காக பிரதிவாதிகள் பேரில் 1903 ஹு ஜுன் மீ 26-உ நஷ்டவழக்கிட்டார்.

வியாச்சிய மூல மேற்பட்டு இரண்டுவருடங்களுக்குமேல் இந்த வழக்குக் கொண்டுவந்திருப்பதால் வாதியின் வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப்போய்விட்டதாக பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். வாதியின் தாவாப்படி கீழ்கோர்ட்டார் தீர்ப்புசெய்தார்கள், இதைப்பற்றி பிரதிவாதிகள் டிஸ்ட்ரிக்ட்கோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில் வாதியின் தாவா காலாவதியால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாக அப்பீலையங்கீகரித்துவாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இவ்விததீர்ப்பு சட்டவிரோதமானதென்றுவாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

வாதிக்காக வக்கீல் பாபு கிருஷ்ண பிரசாத் சர்வாதிகாரி அவர்களும் பிரதிவாதிகளுக்காக வக்கீல் பாபு ஜோகேஷ்சந்திதேவ் அவர்களும் ஆஜராகி ஆக்டிங் சீவ் ஜஸ்டிஸ் ஆர் யப்ரும்பினி துரையவர்கள் ஜஸ்டிஸ் டால் துரையவர்கள் இவர்கள் முன்பாக வாதங்கள் செய்ததில் வாதியின் தாவாவில் கண்ட விஷயங்கள் காலாவதிதோஷ சட்டம் 39, 49-வது ஆர்டிகிள்களுக்கு சம்பந்தப்பட்டவை யென்றும் வாதியின் தாவாவுக்கு எவ்வித காலாவதி தோஷமுமில்லையென்றும் வாதியின் தாவாப்படி தீர்ப்பு செய்யப்பட்டது.

36 கல்கத்தா 141 ஜாடுநாத் டண்ட்புட். அ. வாதி—ஹரிஹர் வகையரா அ. பிரதிவாதிகள்.

# டாமேஜ் அல்லது நஷ்டபரிகார சட்டம்.

1. பலர்தங்களுக்குக் கிடைக்கக்கூடிய லாபத்தை யுத்தேசித்து தங்களுக்குள் கட்டுப்பாடுகள் செய்து கொள்வது நியாய விரோதமல்ல வென்பது:— ஜோதிபிரகாச நந்தி யென்பவர் சில நகைகளை பப்ளிக்காக ஏலம் விற்றுமுதல் செய்தார். அவைகள் 1907 ளூ எப்ரல் மீ 8, 9, 10, தேதிகளில் ஏலம்போடப் பட்டன; 8-உ போடப்பட்ட ஏலத்தில் போட்டாபோட்டி ஏற்பட்டு கிரமமானதொகைக்கு ஏலம் விடப்பட்டன. அந்நகைகளை ஏலம்பெடுக்க வந்தவர்களனைவரும் ஷை 9-உ தினம் தங்களுக்குள் 11 பேர்களை தலைவர்களாக நேமித்துக்கொண்டு அவர்களைக்கொண்டு சவுகரியமான விலைக்கு ஏலங்கேட்கச்செய்கிறதென்றும் அவ்விதமேலெடுத்த நகைகளை ஐந்துபேர்களை பஞ்சாயத்தார்களாக நேமித்து அவர்களைக்கொண்டு கிரமமான விலைக்கு விற்று மிகுதியாயுள்ள லாபத்தொகையை ஏலமெடுக்க வந்தவர்களனைவரும் சமபாகமாகப்பிரித்து பெற்றுக்கொள்ளுகிறதென்றும் அவர்களுக்குள் ஒருவித கட்டுப்பாடுகள் செய்து கொண்டார்கள். அந்த ஏற்பாடுகளின்படி ஷை நகைகளை 9, 10, தேதிகளில் ரூ 44310-க்கு ஏலமெடுத்து பஞ்சாயத்தார்களைக் கொண்டு கிரமமானவிலைக்கு விற்றதில் ரூ 42000 லாபங்கிடைத்தது. இந்த லாபத்தொகை பகர்ந்து கொடுப்பதில் விவாதங்களேற்பட்டதின்பேரில் இத்தொகை பெங்காள பாங்கில் போட்டு வைக்கப்பட்டது. ஹரிசர்ண காரிடி யென்பவர் தன்வீத லாபத்தொகை கிடைக்கவேண்டுமென்று மற்றவர்கள்பேரில் வழக்கிட்டார். உபயவாதிகளுக்குள் ளேற்பட்ட வுடன்படிக்கை சட்டவிரோதமானதாகவும் மோசடியானதாகவும் கிரமனல் சதியோசனையாகவு மிருப்பதால் வாதியின்தாவா சட்டப்படி செல்லாதென்று பிரதிவாதிகள் ஆக்ஷேபித்தார்கள். இந்தகேஸ் பஞ்சாயத்தார் விசாரணைக்கு அனுப்பப்பட்டது; பின்பு வாதிவழக்கை வாபஸ் வாங்கிக்கொண்டார். இந்தவழக்கின் விபரங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டன, இதுவிபரம் ஷை ஜோதிபிரகாச நந்திக்குதெரியவந்தவுடன் ஜெனமூல் ஜோஹரி வகையறா தங்



களுக்குள் ஒருவித கட்டுப்பாடுகள் செய்துகொண்டு மோசடியாகவும் சட்டவிரோதமாகவும் பொதுநீதிகளுக்கு விரோதமாகவும் தான் ஏலத்துக்குக்கொண்டு வந்த நகைகளை மிகுந்த குறைந்த விலைக்கு ஏலத்திலெடுத்து அவைகளை பின்பு கிரமமான விலைக்கு விற்று ஏராளமானலாபம் அடைந்திருப்பதாகவும் அதனால் அவ வகையில் தனக்குநேரிட்ட நஷ்டத்தொகை ரூ 42000 அவர்களிடமிருந்து கிடைக்கவேண்டுமென்றும் வழக்கிட்டார்.

பிரதிவாதிகள் தங்களுக்குள்ளேற்பட்ட கட்டுப்பாடு சலா [illegible]ப்படுத்திக்கொண்டு அது தங்களுக்குரிய லாபங்களை யுத்தேசித்துச் செய்துகொண்டிருப்பதால் வாதியை மோசஞ்செய்ததென்றுவது அது சதியோசனை யென்றுவது எண்ணப்படக்கூடாதென்றும் வாதியின் வழக்கு செல்லுபடியற்றதென்றும் வாதாடினார்கள்.

வாதிக்காக வக்கீல்கள் மிஸ்டர் பி. வி. மிட்டர் முதலியவர்களும் பிரதிவாதிகளுக்காக வக்கீல்கள் மிஸ்டர் யச். டீ. போஸ், அட்வகேட் ஜெனரல் மிஸ்டர் சின்ஹா முதலியவர்களும் ஆஜராகி ஜஸ்டிஸ் பிளௌடர் துரையவர்கள் முன்பாக வாதங்கள் செய்ததில் ஏலத்தில் ஜாஸ்திதொகைக்குக் கேட்கக்கூடாதென்று கட்டுப்பாடுகள் செய்துகொள்ளுவது சட்டவிரோதமானதல்லவென்றும், அதனாலந்த ஏலம் செல்லாதென்று சொல்லக்கூடாதென்றும், பிரதிவாதிகள் தங்களுக்குரிய லாபங்களை யுத்தேசித்து செய்துகொள்ளும் ஏற்பாடுகள் சட்டப்படி செல்லுபடியுள்ளதென்றும், வாதிக்கு எவ்வித வியாஜ்ஜிய மூலமுமில்லையென்றும் 15 கல்கத்தா 533 புல்பெஞ்சி தீர்ப்பை யனுசரித்து வாதியின் வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

36 கல்கத்தா 134 ஜோதிபிரகாசநந்தி வாதி—ஜெனமூல் ஜோஹரி வகையறா பிரதிவாதிகள்.

# சாக்ஷியசட்டம்.

1. வருமான வரும்படி விசாரணையிலேற்பட்ட ரிகார்டுகளை சீவில் கோர்ட்டார் பார்வையிடலாமென்பது.

சென்னை ஹைகோர்ட்டு 1904வருஷத்திய அசல் 64 நெ. வெங்கடாசலசெட்டியார் வகையறுவுக்கும் சம்பந்தஞ்செட்டியார் வகையறுவுக்கும் வழக்கு ஏற்பட்டிருந்ததில் ஷை சென்னை நகர் இன்கம்டாக்ஸ் டிப்டிகலெக்டராபீசி[illegible] வருமான வரும்படிகளைக்காட்டக்கூடிய சில [illegible] சாக்ஷியமாக தருவிக்கவேண்டியிருந்தது. அதனால் அந்த ரிகார்டுகளை யனுப்பும்படி ஜட்ஜியவர்கள் ஷை இன்கம்டாக்ஸ் கலெக்டரவர்களுக்கு சம்மனனுப்பினார்கள்.

ஷை தஸ்தாவேஜிகள் ஆபீசில் ரகசியமாக வைக்கப்பட்டிருக்கும் தஸ்தாவேஜிகளென்றும், அவைகளை பப்ளிக்குக் கொண்டுவரக்கூடாதென்றும், அவ்விதம் வெளிப்படும்பட்சத்தில் பொதுஜன நன்மைகளுக்கு விரோதமாக முடியுமென்றும், அவைகள் ராஜாங்க காரியங்களுக்குரிய தஸ்தாவேஜிகளென்றும், வருமான வரும்படி சட்டம் 38வது செக்ஷன்படிக்கும் அந்த சட்டத்தை யனுசரித்து ஏற்பட்ட கவர்மெண்டாரவர்களுடைய 15வது ரூல்படிக்கும் அவைகளை யெவர்களுக்கும் காட்டக்கூடாதென்றும் இன்கம்டாக்ஸ் டிப்டி கலெக்டர் ஆக்ஷேபித்தார். ஜட்ஜியவர்கள் ஷை ஆக்ஷேபணைகளை யங்கீகரிக்காமல் ஷை ரிகார்டுகள் கோர்ட்டுக்கனுப்பப்பட வேண்டுமென உத்திரவு செய்துவிட்டார்கள். இதன்பேரில் அப்பீல் செய்ததில் அப்பீல் வாதிகளுக்காக வக்கீல்கள் கனம்பொருந்திய அட்வொகேட் ஜனரலவர்கள் டி. வி. சேஷகிரிஅய்யரவர்கள், வி. மாசிலாமணிபிள்ளையவர்கள் டி. மல்லிகார்ச்சுன அய்யரவர்கள் இவர்களும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக வக்கீல்கள் கனம் பொருந்திய வி. கிருஷ்ணசாமிய்யரவர்களும் வி. சீனிவாசய்யங்காரவர்களும் ஸி.பி. ராமய்யரவர்களும் ஆஜராகி சீவ்ஜஸ்டிஸ் ஸர் ஆர்னல்ட் வொயிட்துரையவர்கள் கனம்பொருந்திய ஜஸ்டிஸ் சங்கரனயர் அவர்கள் இவர்கள் முன்பாக விவாதங்கள் செய்ததில்



வரிகொடுப்போருடைய வரும்படி யினங்களைக்காட்டக்கூடியதற்காக இன்கம்டாக்ஸ் கலெக்டரவர்களிடம் தாகல் செய்யப்படும் தஸ்தாவேஜிகளும் ஸ்டேட்மெண்டுகளும் இராஜாங்க ரிகார்டுகளாகமாட்டாதென்றும், வருமானவரும்படிச் சட்டம் 38வது செக்ஷன் கவர்ன்மெண்டாரவர்களுடைய 15வது ரூல் இவைகள் ஷை வரும்படி யினங்களை பொது ஜனங்கள் தெரிந்து கொள்வதற்கிடங்கொடுக்கக்கூடாதென்பதற்காக வேற்பட்டனவேயன்றி நியாயாதிபதிகள் அவைகளை தருவித்துப் பார்க்கக்கூடாதென்ற கருத்துடன் அச்சட்டங்களேற்படவில்லையென்றும், ஷை ரிகார்டுகள் சாக்ஷிய சட்டம் 124வது செக்ஷன்படி கலெக்டர் உத்தியோகமுறைமையில் தெரிந்துகொண்ட ரகசியவிஷயங்களல்லவென்றும் சாக்ஷியசட்டம் 162வது செக்ஷன்படி அந்த ரிகார்டுகளைத் தருவித்துப் பார்வையிட்டு சம்பந்தப்பட்ட கேசில் தாகல் செய்யப்படக்கூடியதாயிருந்தாலவைகளை தாகல் செய்யவும் அல்லது அவைகளை தாகல் செய்யக்கூடாதென வுத்திரவு செய்யவும் ஜட்ஜியவர்களுக்கு அதிகாரமுண்டென்றுந் தீர்ப்பு செய்தார்கள்.

32. சென்னை 62 வெங்கடாசல செட்டியார் வகையறா அ வாதிகள்—சம்மந்தசெட்டி வகையறா அ. பிரதிவாதிகள்.

# சொத்துபராதீனசட்டம்.

4. பெந்தக சொத்தை மீட்க பாத்தியமுடைய காலம் எதுவரையிலென்பது

பெகாரிஷகா என்பவர் தான் பெற்றிருந்த பெந்தக பத்திரப்படிக்குள்ள தொகை ஷை சொத்தை யேலவிற்று முதல் செய்துகிடைக்கவேண்டுமென்றும், அச்சொத்தின் பேரில் முன்பாத்தியங்களேற்பட்டிருந்தால் அத்தொகைகளைத் தான் கொடுத்து விடுவதாகவும் பெந்தகம் வைத்தவன் முன்பெந்தகதாரன் முதலியவர்களைப் பிரதிவாதிகளாகச் சேர்த்து வழக்கிட்டிருந்தார். கீழ் கோர்ட்டார் வாதியின் தாவாப்படி

தீர்ப்புசெய்ததில் முன்பெந்தகத்தொகையை ஆறுமாதகெடுவுக்குள் கட்டிவிட்டு பெந்தகசொத்து எல்லப்போடப்படவேண்டியதென்று கண்டிருந்தது. இந்த தீர்ப்பு சரியானதல்லவென்று பிரதிவாதிகள் அப்பீல் செய்திருந்தார்கள். அதனல் வாதி மேற்கண்ட ஆறுமாதகெடுவுக்குள் முன் பெந்தகத் தொகையை கோர்ட்டில் கட்டவில்லை. ஷை அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு முன்பெந்தகத் தொகையை 1907 வரு ஏப்றல் 16உ வாதி கோர்ட்டில் கட்டிவிட்டார். அதனை ஷை டிக்கிரியை நிறைவேற்றிக்கொள்ளும்படி 1907வரு மேயீ 14உ கோர்ட்டார் உத்திரவுசெய்துவிட்டார்கள். பின்பு வாதி ஷை டிக்கிரி உறுதிசெய்யப்படவேண்டுமென்று 1907வரு ஜூலையீ 13 மனுக்கொடுத்து பிரதிவாதிகளுக்குள்ள ஆக்ஷேபனைகளைத் தெரிவிக்கும்படி நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. டிக்கிரியில்கண்ட கெடுவுக்குள் வாதி முன்பெந்தகத் தொகையை கோர்ட்டில் கட்டாததால் முன் பெந்தகத்தை மீட்கும்படியான பாத்தியதையை வாதியிழந்துவிட்டதாக பிரதிவாதி முகர்தலால்சேர்ஷ் கட்சியாடினர். பிரதிவாதி சொல்லும் கக்ஷி பிரயோஜனமற்றதென தள்ளுபடி செய்யப்பட்டதின் பேரில் கீழ்கோர்ட்டார் செய்த உத்திரவு ரத்து செய்யப்படவேண்டுமென டிஸ்டிரிக்ட்டு கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள். டிஸ்டிரிக்ட் ஜட்ஜி பிரதிவாதிகள் சொல்லும்கட்சி நியாயமானதென்று கீழ்கோர்ட்டாருடையவுத்திரவை ரத்து செய்துவிட்டார்கள். இவ்விதஞ் செய்தது சட்டவிரோதமானதென்று வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார். வாதிக்காக வக்கீல் பாபுநில் மாதபபோஸ் அவர்களும் பிரதிவாதிக்காக வக்கீல் பாபு நாலினிரஞ்சன் சபார்ஜி அவர்களும் ஆஜராகி ஜஸ்டிஸ் காஸ பேரஸ்ஞ் துரையவர்கள் ஜஸ்டிஸ் சார்ஸி துரையவர்கள் இவர்கள் முன்பாக வாதங்கள் செய்ததில் டிக்கிரி யுறுதி செய்யப்படுவதற்குமுன் எந்த காலத்திலாவது வாதி முன் பெந்தகத்தை மீட்க பாத்தியமுடையவனென்று தீர்ப்பு செய்தார்கள்.

36 கல்கத்தா 12 பிபின் பெகாரிஷகா அ வாதி—
முகர்தலால் சேர்ஷ் அ பிரதிவாதி



5. அனந்தர வார்சு பாத்தியங்களை பெந்தகம் வைப்பது செல்லாதென்பது.

முசாமத் பிடாபோ என்று விதந்து தன் புருஷன் சொத்துக்களை வார்சுக்கிரமத்திலடைந்து அனுபவித்து வந்தாள். அவள் புருஷனுக்கு நெருங்கிய அனந்தரவார்சுகளாயுள்ள டாடாராம் ஹர்சுக் இவ்விருவரும் தங்களுக்கு அனந்தரவார்சு பாத்தியமுள்ளதும் ஷை விதந்து அனுபவித்து வருவதுமான பூஸ்திதிகளை 1884வரு செப்டம்பர்மாதம் 6உ ஜெகநாத் என்பவருக்கு பெந்தகம் வைத்து சிலதொகை கடன் வாங்கினர்கள். ஷை பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட காலத்தில் அதில்கண்ட தொகை ரூபாவும் தங்களுக்கு பத்தாய் விட்டதாக சப்ரிஜிஸ்டரர் அவர்கள் முன்பாக ஒப்புக்கொண்டார்கள். ஆனல் அவர்கள் முன்பாக யாதொரு தொகையும் கொடுபடவில்லை. ஷை பத்திரத்தில் வரு 1க்கு 100க்கு 37½ விதம் வட்டி சேர்த்துக் கொடுக்கிறதென்று கண்டிருக்கிறது. ஷை விதந்து 1888வரு அக்டோபர்மாதம் 5உ இறந்துவிட்டாள். ஜெகநாத் ஷை பெந்தக பத்திரத்தொகை கிடைக்கவேண்டுமென்று ஷை விதந்துவாலும் டாடாராம் வகையறாவாலும் பராதீனம் பெற்றவர்களையும் பிரதிவாதிகளாகச் சேர்த்து வழக்கிட்டார். ஷை பெந்தக பத்திரத்துக்கு எவ்விதப்பிரதிபிரயோஜனமுமில்லையென்றும், ஷை விதந்துபேரிலும் அவளிடம் பெந்தக சொத்துக்களை வாங்கியவர்கள் பேரிலும் வழக்கிடவேண்டியதினிமித்தம் தான்பெந்தகபத்திரம் எழுதிக்கொடுத்ததாகவும் பிரதிவாதிகள் கக்ஷிபாடினர்கள். பிரதிவாதிகள் சொல்லும் கக்ஷியுண்மையானவையென கீழ்கோர்ட்டார் கண்டுபிடித்து வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இத்தீர்ப்பு ரத்து செய்யப்படவேண்டுமென்று வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

வாதி வக்கீல் பாபு ஜானேந்திரநாத் சவுத்திரியவர்களுக்காக சரத் சந்திர சவுத்திரியவர்களும் பிரதிவாதிகளுக்காக வக்கீல்கள் மவுலவி முகமது இஷாக் அவர்கள் பாபு துர்காசரண் பனர்ஜியவர்கள் இவ்விருவர்களும் ஆஜராகி ஜஸ்டிஸ் ரிச்சேர்டஸ் துரையவர்கள் ஜஸ்டிஸ் கிரிபல் துரையவ

ர்கள் இவர்கள் முன்பாக விவாதங்கள் செய்ததில் தாவா பெந்தக பத்திரம் ஏற்பட்ட காலத்தில் அதிற்கண்ட சொத்துக்கள் விதந்துவின் ஸ்வாதீனத்திலிருந்ததேயன்றி பத்திரம் எழுதிக்கொடுத்தவர்களுடைய ஸ்வாதீனத்தில் எவ்வித சொத்துக்களுமில்லையாகையால் ஷை பத்திரம் சொத்துப்பராதீன சட்டப்படி செல்லுபடியற்றதென்று வாதியின் அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

31 அலகபாத் 53 ஜெகன்னாத்சிங் அ வாதி—டிப்போ வகைரு அ. பிரதிவாதிகள்.

6. பெந்தக வீதாசாரத் தொகையைப்பற்றி எப்போது வழக்கிடலாமென்பது

வாதியும் பிரதிவாதிகளில் சிலரும் தாவாவில் சேராத சிலரும் சேர்ந்து ஒருவருக்கு 1892ஹு ஆகஸ்டுமீ 20உ ஒரு பெந்தக பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தார்கள். அதன் பேரில் வழக்கிட்டு 1902ஹு ஜூலைமீ 11உ டிக்கிரி யேற்பட்டது. அந்த பெந்தக சொத்துக்களில் சிலபாகம் 1903ஹு ஏப்ரல்மீ 22உ ஏலம் போடப்பட்டதில் டிக்கிரி கடன் பூராவும் தீர்ந்து போய் விட்டது. இதன் பேரில் வாதி தன் வீத கடனுக்கு தன்னுடைய சொத்துக்கள் எவ்வளவு கட்டுப்படக்கூடியதோ அதற்கு மேற்பட்ட சொத்துக்கள் தன்னுடையது டிக்கிரிக்கடனுக்கு ஏலம்போடப்பட்டுப் போய்விட்டதாகவும், தான் செலுத்தக் கடமைப்பட்ட தொகைக்கும் தன்னுடைய சொத்துக்கள் ஏலம்போடப்பட்ட தொகைக்கும் வித்தியாசமாகவுள்ள தொகை பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கவேண்டுமென்று வாதி வழக்கிட்டார். டிக்கிரியில்கண்ட பூரா சொத்துக்களும் ஏலம் போடப்படாமல் சில பாகமட்டில் ஏலம்போடப்பட்டிருப்பதால் வாதிக்கு வீதாசாரத்தொகை கிடைக்க நியாயமில்லையென்று 26 அலகபாத் 407 தீர்ப்பை யனுசரித்து வாதியின் வழக்கை கீழ்க்கோர்ட்டார் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இது சட்ட விரோதமானதென்று வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.



வாதிக்காக வக்கீல் பாபு ஜோகேந்திரநாத் சவுத்திரி யவர்களும் பிரதிவாதிகளுக்காக பண்டிட் பகதூர் சட்டர்ஜி அவர்களும் ஆஜராகி சீப் ஜஸ்டிஸ் ஸர்ஜான் ஸ்டான்லே னயிட் துரையவர்கள் ஜஸ்டிஸ் பனர்ஜி யவர்கள் இவர்கள் முன்பாக விவாதங்கள் செய்ததில் டிக்கிரிகடன் பூராவும் தீர்ந்துபோயவிட்டதால் வாதி தனக்கு கிடைக்கவேண்டிய வீதாசாரத் தொகைக்கு வழக்கிடலாமென்றும், பெந்தக டிக்கிரி பூராவும் தீருகிறவரையில் வாதி வழக்கிட நியாயமில்லையென்றும் கேஸின் சாராம்சத்தில் பிரவேசித்து தீர்ப்புசெய்யவேண்டியதென்றும், ஸி. ப். கோடு 562வது செக்ஷன்படி ரிமாண்டு செய்யப்பட்டது.

31 அலகபாத் 65 முகம்மதயாகியா அ வாதி—ராஷ்ஷியூடென் வகைரு அ. பிரதிவாதிகள்.

7. குத்தகைதாரன் யாரிடத்தில் குத்தகைத்தொகை கொடுக்கவேண்டுமென்பது.

பரமேஸ்வரபட்டர் என்பவருக்கு ஏராளமான ஸ்திதிகளிருந்தன அந்நிலங்களுக்குபட்டா அவர் பேரிலேயே ஏற்பட்டிருந்தன. அவர் இறந்த காலத்தில் அவருக்கு சுப்பருவ், ராமகிருஷ்ணன் என்ற இரண்டு பிள்ளைகளும் காவேரியம்மாளென்ற பெண்ணுமிருக்கிறார்கள். பரமேஸ்வரபட்டர் பேரிலிருந்த பட்டா சுப்பருவ் பேரால் மாற்றப்பட்டது. அவர் இறந்தவுடன் அந்த பட்டா ராமகிருஷ்ணன் பேரால் மாற்றப்பட்டது. ராமகிருஷ்ணன் விவாகமின்றியிலேயே இறந்தார். லிங்கப்பாபின் ராமா வகைரு பிரதிவாதிகள் தங்கள் நிலங்களை ஷை சுப்பருவிடத்தில் ரூ 800-க்கு அனுபோக வொத்தி வைத்திருந்தார்கள். அந்த நிலங்களை முதல் பிரதிவாதி லிங்கப்பாமட்டில் 12 வருடங்களுக்கு [illegible]கைக்கு ஒப்புகொண்டு சுப்பருவுக்கு குத்தகை பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தார். அந்தப்படி சுப்பருவ் ஜீவதிசையில் அவரும் அவர் இறந்தபின் அவர் மனைவி [illegible]ம்மாளும் குத்தகைத்தொகை வசூலித்துவ[illegible]ர்கள். ராமகிருஷ்ணு இறந்தவுடன் அச்சொத்துக்களுக்கு [illegible] கோரி ஷை காவேரியம்மாள் தான் பாத்தியஸ்தியென்றும், ஷை அனுபோக வொத்திநிலங்களின் குத்தகைத்தொகை 1902,1903

இந்த இரண்டு வருடங்களுக்கும் கிடைக்கவேண்டுமென்றும், பிரதிவாதிகள் பேரில் வழக்கிட்டான். ஷை காவேரியம்மாள் ஷை. நிலத்தில் சில பாகத்தை 2ம் வாதிக்கு விற்றுவிட்டதால் அவரும் வாதியாகவிருந்து வழக்கிட்டார். ஷை பெந்தகத்தொகை சுப்பராவுடைய சுயார்ஜிதமென்றும், அந்த பெந்தக சொத்தில் வாதிக்கு எவ்வித பாத்தியமுமில்லையாதென்றும், அச்சொத்துக்குடையவள் அவன்மனைவியாதலால் அவளிடம் குத்தகைத்தொகை கொடுபட்டுத் தீர்த்துவிட்டதென்றும், குத்தகை விஷயமாய் உபயவாதிகளுக்குள்ளும் எவ்வித காண்டிராக்டும் ஏற்படவில்லையென்றும், 2ம் வாதி வழக்கை விலைக்கு வாங்கியிருக்கிறாரென்றும், பிரதிவாதிகளுக்கு அலைக்கழிவு வரும்படியான துவேஷத்தால் வாதிகளால் மோசடியான வழக்கு கொண்டு வந்திருப்பதாகவும், முதல் பிரதிவாதி கட்சியாடினார். 3ம் பிரதிவாதி தனக்கு இந்த தாவாவில் எவ்வித சம்பந்தமுமில்லையென்றும்; குத்தகைச் சீட்டு எழுதிக்கொடாத தன்னை பிரதிவாதியாகச் சேர்த்தது பிசகென்றும் கட்சியாடினார்.

முதல் பிரதிவாதி நல்ல எண்ணத்துடன் தான் கொடுக்கவேண்டிய குத்தகைத்தொகையை சுப்பராவுடைய விதந்து கவுரியம்மாளிடம் கொடுத்து விட்டதால் பிரதிவாதிகள் பேரில் அதே தொகைக்கு வழக்கிட்டது செல்லாதென்று சப்ஜட்ஜியவர்கள் தீர்மானித்தார்கள். இந்த தீர்ப்பு டிஸ்டிரிக்ட் ஜட்ஜியவர்களாலும் உறுதிசெய்யப்பட்டது. இத்தீர்ப்பு சட்டவிரோதமானதென்று வாதி ஹைகோர்ட்டில் அப்பில் செய்தான்.

வாதிக்காக வக்கீல் மன் ஏ சிவேஷவர்கர் அவர்களும் பிரதிவாதிகளுக்காக வக்கீல் மஸ், மஸ். பாட்கர் அவர்களும் ஆஜரானார்கள். ஜஸ்டிஸ் ஸ்காட்துரையவர்கள் ஜஸ்டிஸ் சந்தாவர்க்கர் அவர்கள் இவர்கள் முன்பாக வாதஞ்செய்ததில் வாதியின் பாத்தியதையை பிரதிவாதிகள் முன்னமே தெரிந்துகொண்டிருக்கிறார்களென்பதற்கு எவ்வித ருஜுவுமில்லை. மேலும் முதல் பிரதிவாதி நல்ல எண்ணத்துடன் சுப்பராவு மனைவியிடத்தில் குத்தகைத்தொகையை செலுத்தியிருப்பதால் அது சொத்துப்பராதீனசட்டம் 50வது செக்



ஷன்படி செல்லுபடியுள்ளதென்றும், கவுரியம்மாளை பிரதிவாதியாகச் சேர்க்காதிருந்தது வாதியின் பிசகென்றும், வாதியின் அப்பில் தள்ளுபடி செய்யப்பட்டது.

33 பம்பாய் 96 காவேரியம்மாள் வகைரு அ. வாதிகள்—லிங்கப்பா பின் ராமா வகைரு அ. பிரதிவாதிகள்,

8. பெந்தகபத்திரத்தின் பேரில் வழக்கும் அச்சொத்தின் பேரிலேற்பட்ட பூர்வபாத்தியங்களும்.

பிரதிவாதி காஷியாய் தனக்குச் சொந்தமான நிலத்தை மகமுதாலி என்பவருக்கு ரூ 9000க்குக்கு 1903௵ ஏப்பரல் மாதம் 3௳ சாசனஞ் செய்தான். அ[illegible] அந்த மகமுதாலி வாதியிடத்தில் 1904 ௵ ஏப்பரல் மாதம் 7௳ பெந்தகம் வைத்து ரூ 7000 கடன் வாங்கியிருந்தார். பிரதிவாதி சாசனத்தொகை பூராவும் பெற்றுக்கொண்டதாக சாசனத்தில் சொல்லியிருப்பதுமன்றி அந்த நிலம் சம்பந்தமான யாவற்று மூல ஆதாரங்களையும் மகமுதாலியிடம் கொடுத்து விட்டான். வாதி தான் வாங்கிய பெந்தகபத்திரத்தின் பேரில் பெந்தகத்தொகை பாக்கி ரூ 6455 சொச்சம் கிடைக்க வேண்டுமென்றும், பெந்தகசொத்துக்கள் நிர்ணமாய் ஏலவிற்றுமுதல் செய்யப்படவேண்டுமென்றும் 1905௵ மேமீ 12௳ வழக்கிட்டார். பிரதிவாதி வசத்திலும் சில பெந்தக சொத்துக்களிருந்ததால் இவனும் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டான்.

பிரதிவாதி காஷியாய் தனக்கு சாசனத்தொகை பாக்கி ரூ 4000 சேரவேண்டியிருப்பதாகவும், அத்தொகைக்கு தாவா சொத்தில் முன்பாத்திய முண்டென்றும் அத்தொகையை முன்பதிந்து ஏலம்போடவேண்டுமென்றும், பிரதிவாதி கட்சியாடினான். பிரதிவாதி சாசனத்தொகை பூராவும் பெற்றுக்கொண்டு விட்டதாகச் சொன்னதுமன்றி மூலாதாரங்கள் எல்லாம் கொடுத்துவிட்டபடியால் அவன் சொல்லும் ஆக்ஷேபனைகள் பிரயோஜனமற்றவையென்றும், அவன் கட்சி எஸ்டாபல் தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாகவும், வாதி வாதித்தார். சாசனவாசகங்களை தனக்கு வாசித்துக் காட்டவில்லையென்றும் சாசனம் எழுதுவதற்கு

மூலாதிரவுகள் வேண்டுமென்பதாக தன்னை யேமாற்றிவாங்கி விட்டதாகவும், தன்னுடைய பாத்தியங்களை முன்னிட்டு தான் சாசனநிலங்களில் சிலவற்றை யநுபவித்து வருவதாகவும், பிரதிவாதி கட்சி சொன்னான். இந்த பிரதிவாதியின் பாத்தியங்களை ரத்துசெய்யவேண்டியதினிமித்தமாகவே தாவா பெந்தக பத்திரம் எழுதிவாங்கபட்டிருப்பதாக வாதியின் வழக்கு ஜஸ்டிஸ் டாக்னிபட்டி துரையவர்களால் தள்ளுபடி செய்யப்பட்டது. இத்தீர்ப்பு ரத்து செய்யப்படவேண்டுமென்று வாதி ஹைகோர்ட்டில் அப்பில் செய்தார்.

வாதிக்காக வக்கில் ஸ்டாராக்மன் துரையவர்களும், பிரதிவாதிக்காக வக்கில் மிர்ஜா அவர்களும் ஆஜராகி சிவ் ஜஸ்டிஸ் ஸர் லாரென்ஸ் ஜெனகின் துரையவர்கள் ஜஸ்டிஸ் ராசெல் துரையவர்கள் இவர்கள் முன்பாக வாதங்கள் செய்ததில், பெந்தக சொத்தில் சில பாகம் பிரதிவாதி வசத்திலிருப்பது வாதிக்குத் தெரிந்திருந்த போதிலும் சாசனத் தொகைப் பூராவும் பிரதிவாதிக்குக் கொடுபடவில்லை யென்பதும் சிலபாகம் பாக்கியிருக்கிறதும் வாதிக்குத் தெரிந்திருக்க நியாயமில்லையென்றும், சாசனத்தொகைப் பூராவும் பெற்றுக்கொண்டதாக சாசனத்தை யொப்புக்கொண்டு அதில் கையெழுத்து செய்திருப்பதுமன்றி அந்த நிலம் சம்பந்தப்பட்ட யாவற்று மூலாதிரவுகளையும் பெந்தகம் வைத்த மகமதாலியிடம் கொடுத்து விட்டதால் அச்சொத்தில் தனக்கு முன்பாத்தியமிருக்கிறதென்று பிரதிவாதி ஆட்சேபிக்கத்தடைபட்டிருக்கிறார்களென்றும், எஸ்டாபல் தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதென்றும், அவன் கொண்டாடும் பாத்தியம் வாதியை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாதென்றும், வாதியின் தாவாப்படி தீர்ப்பு செய்யப்பட்டது.

33 பம்பாய் 33 டெக்கிஸ்ராம் கிரிதாரிடாஸ் அ வாதி — காஷிபாய் அ பிரதிவாதி



# காண்டிராக்ட் ஆக்ட்டு.

3. ரயில்வே காண்டிராக்ட்டுக்கு கடன் கொடுப்பவருக்கு அந்தகம்பெனியாரால் கொடும் செக்கிலுள்ளபாத்தியம்.

கொல்லுரசய்யர் என்பவர் மெட்ராஸ் ரயில்வேயில் சில காண்டிராக்ட் ஒப்புக்கொண்டிருந்தார். அதற்குவேண்டிய தொகை பூராவும் வாதி கரிவெங்கிட ரெட்டியார் கொடுக்க வேண்டியதென்றும், ஷை காண்டிராக்ட்டுக்காக கம்பெனியார் கொடுக்கும் செக்குகளை வாதிக்குப் பிரதிவாதி யப்போதைக்கப்போது கொடுத்துவிடவேண்டியதென்றும், ஸர்ப்பங்களை பின்னால் கணக்குப்பார்த்து பிரித்து எடுத்துக்கொள்ளவேண்டியதென்றும், உபய வாதிகளும் 1901 வரு டிஸம்பர் மாதத்தில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அந்தப்படி பிரதிவாதி 1902 வரு செப்டம்பர் மீ 16 வாங்கிய ரூ 936 புள்ள செக்கை வாதிக்குக் கொடுக்கவில்லை யென்றும், அந்த செக்காவது அதன் தொகையாவது கிடைக்கவேண்டுமென்றும், பிரதிவாதிபேரில் வழக்கிட்டார்.

உபயவாதிகளும் கூட்டுப்பங்காளியானதால் ஷை ரெயில்வே சம்பந்தமான யாவற்று வரவு செலவு கணக்குகளும் பார்த்து வாதிக்குக் கிடைக்கக் கூடிய தொகையைப்பற்றி வழக்கிடவேண்டியதேயன்றி குறிப்பிட்ட ஒரு தொகையைப் பற்றி வழக்கிட்டது செல்லாதென்றும், வாதியால் பிரதிவாதிக்கு ஜாஸ்தி தொகை கொடுபட வேண்டியிருக்குமேயன்றி வாதிக்குப் பிரதிவாதியால் எவ்வித தொகையும் கொடுபட வேண்டியதில்லை யென்றும், பிரதிவாதி சுவியாடினார். கீழ் கோர்ட்டார் வாதியின் தாவாப்படி தீர்ப்பு செய்துவிட்டார்கள். இத்தீர்ப்பு சட்டவிரோதமானதென்றும், வாதி கூட்டுப் பங்குபிரிவினைக்கு வியாஜ்ஜியந் செய்யவேண்டியதேயன்றி குறிப்பிட்டசில தொகைக்கு வழக்கிட்டது செல்லாதென்றும், வாதியின் வழக்கை டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டார் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இத்தீர்ப்பு ரத்து செய்யப்படவேண்டுமென்று வாதி ஹைகோர்ட்டில் அப்பில் செய்தார்.

வாதி வக்கில் கனம் வி. கிருஷ்ணசாமி அய்யரவர்களுக்காக மிஸ்டர் சீனுவாசய்யங்கார் அவர்களும் பிரதிவாதிக்காக வக்கில் டி. வி. சேஷகிரி அய்யரவர்களும் ஆஜராகி சீவ் ஜஸ்டிஸ் ஸர் ஆர்னல்டுவொயிட் துரையவர்கள், ஜஸ்டிஸ் அப்டர்ரகிமான் அவர்கள் இவர்கள் முன்பாக வாதங்கள் செய்ததில், உபயவாதிகளுக்குள்ளு மேற்பட்ட வுடன்படிக்கைப்படி பிரதிவாதி வாங்கும் செக்குகளை வாதிக்கு அப்போதைக்கப்போது கொடாமல் தானே வைத்துக்கொள்ளும் பட்சத்தில் வாதி தான் செய்துகொண்டிருக்கும் உடன்படிக்கைப்படி பிரதிவாதி கேட்குந் தொகையெல்லாம் கொடுத்துவர எவ்விதத்திலும் சாத்தியப்படாதென்றும், வாதி தான் ஏதுதேசமாக கான்டிராக்ட்டுக்கு வேண்டிய தொகை பூருவுங் கொடுக்கக்கடமைப்பட்டவராக விருப்பதால் வாதியே சகல கஷ்டங்களுக்கும் பாத்தியப்பட வேண்டியிருக்குமென்றும், வாதியின் அப்பீலை யங்கீகரித்து கீழ்கோர்ட்டு அப்பீல் தீர்ப்பு ரத்துசெய்யப்பட்டது.

32 சென்னை 76 கரிவெங்கடரெட்டி அ வாதி— கொல்லூராசய்யா. அ.பிரதிவாதி

4. வியபசாரஞ்செய்ய வீடு வாடகைக்கு கொடுப்பதும் அந்த வாடகைத்தொகைக்கு வழக்கிடுவது செல்லாதென்பதும்

சோகாலால் என்பவர் தன்னுடைய இரண்டு வீடுகளை வியபசாரஞ் செய்து காலக்ஷேபஞ் செய்துவரும் பியாரி, கல்லோ என்ற இரண்டு ஸ்திரீகளுக்கும் வாடகைக்கு கொடுத்திருந்தார். அந்த வாடகைத்தொகை சரிவரகொடுபடாததால் அத்தொகை கிடைக்கவேண்டுமென்று ஷை பியாரி கல்லோ இருவர்பேரிலும் வாதி சோகாலால் வழக்கிட்டார்.

பிரதிவாதிகள் வியபசாரத்தொழில் நடத்துவதற்காக தாவா வீடுகள் வாடகைக்குக் கொடுக்கப்பட்டிருப்பதால் உபயவாதிகளுக்குள்ளு மேற்பட்ட காண்டிராக்ட்டு துன்மார்க்கமுள்ளதாகவும், பொது நீதிகளுக்கு விரோதமானதாகவிருப்பதாகவும், அதனால் அந்த காண்டிராக்ட்டு சட்டப்படி செல்லாதென்றும், பிரதிவாதிகள் ஆக்ஷேபித்தார்கள்.



இந்தகேசை விசாரித்த ஜான்ஸி சப்கோர்ட்டு ஜட்ஜியவர்களுக்கு சட்டசம்பந்தமாக சந்தேகந் தோன்றியதால் இது விஷயமாய் ஹைகோர்ட்டாரவர்களுக்கு சி- பு. கோடு 617-வது செக்ஷன்படி. ரெவரன்ஸ் செய்தார்கள்.

வாதிக்காக வக்கீல் பாபு ஞானேந்திரகிருஷ்ண முகார்ஜியவர்களும், பிரதிவாதிகளுக்காக வக்கில் லாலாகிருதாரிலால் அகரவாலா அவர்களும் ஆஜராகி சீவ் ஜஸ்டிஸ் ஸ்டான்லேவயிட் துரையவர்கள் ஜஸ்டிஸ் பனர்ஜியவர்கள் இவர்கள் முன்பாக விவாதங்கள் செய்ததில் உபயவாதிகளுக்குள்ளு மேற்பட்ட காண்டிராக்ட்டின் கருத்து துன்மார்க்கமும் பொது நீதிகளுக்கு விரோதமானது மான வியபசாரத்தொழில் செய்வதற்கேயன்றி வேறு விஷயங்களுக்கல்ல வாகையால் வாதியின் தாவா தள்ளுபடிக்கு அருகமானதென்று தீர்மானிக்கப்பட்டது.

31 அலகபாத் 58 சோகாலால் அ. வாதி—பியாரிவகையறா அ. பிரதிவாதிகள்

# இன்சால்வன்ஸி ஆக்ட்டு

1. ஒருவரிடத்தில் டிரஸ்டியாக கொடுத்து வைத்திருக்குந் தொகைக்கும் கடனாக கொடுத்துவைத்திருக்குந் தொகைக்குமுள்ள வித்தியாசம்

ஜி. ஸ்மித் என்பவர் தனக்கு பாத்தியமுள்ள ரூ 627 செக்கொன்றை ஆர்பத்னெட் கம்பெனியாரிடம் அனுப்பிதான் பின்னால் ரூ 573-க்கு மற்றொரு செக்கு அனுப்புவதாகவும், அவ்விரண்டுங் கூடியதொகை ரூ 1200-யும் பிக்ஸெட்டு டிபாஸிட்டாய் ஒருவருஷத்துக்கு வைத்திருக்கவேண்டியதென்றும், அந்தொகையை தனக்கும் மிஸ். ம்ஸ். ஸ்மித்துக்குமாவது இவர்களில் எவர் ஜீவந்தர்களாயிருக்கிறார்களோ அவருக்காவது கொடுக்கவேண்டுமென்றும் ஷை ஆர்பத்னெட் கம்பெனியாருக்கு கடிதம் ஒன்று 1906 ஸ்ல் அக்டோபர் மீ 12-உ ஜி. ஸ்மித் எழுதியிருந்தார். அந்தப்படியே செய்வதாக ஆர்

பத்னட் கம்பெனியார் அக்டோபர் மாதம் 13உ பதிலெழுதி விட்டார்கள். அந்தப்படி ஜி. ஸிமித் தான் சொன்னதொகை பாக்கி ரூ 583-ம் அனுப்பவேயில்லை. ஷை ஆர்பத்னெட் கம்பெனியார் இன்சால்வெண்டாக போய்விட்டதாக தங்கள் சொத்துக்களையெல்லாம் சென்னை அபிஷல் அஸையனியிடத்தில் ஒப்பிவித்து விட்டபடியால் ஜி. ஸிமித் தான் ஒப்படைப்பாக ஆர்பத்னெட் கம்பெனியாரிடங் கொடுத்துவைத்திருந்த தொகை ரூ 627-ம் கிடைக்கவேண்டுமென்று ஷை அபிஷல் அஸையனிபேரில் வழக்கிட்டார். தாவாவில்க்கண்ட தொகை டிரஸ்டு தொகையல்லவென்றும், மற்றவர்களைப்போல் வாதியும் கடன்கொடுத்தவராகவே யெண்ணப்படவேண்டியதென்றும், தாவாப்படி வாதிக்கு யாதொன்றுங் கிடைக்கத்தக்கதில்லையென்றும், அபிஷல் அஸையனி கக்ஷியாடினார்கள்.

வாதிக்காக டி. யம். ஸி. டௌனிங் துரையவர்களும் பிரதிவாதிக்காக கே. ருபனுந்ஷெனே அவர்களும் ஆஜராகி விவாதங்கள் செய்ததில் வாதி தான் செய்த வாக்குறுதிப்படி பின்னிட்டு அனுப்புவதாகச்சொன்ன தொகை அனுப்பாததால் முன்னனுப்பிய தொகையை பிக்ஸெட் டிபாஸிட்டில் வைத்து வைக்க நியாயமில்லையென்றும், அவர்களுக்குள் நிக்ஷேபதாரிபாத்தியமில்லையென்றும் அவ்விருவரும் கடன் கொடுத்தவர் கடன் வாங்கினவர்களாக எண்ணப்படவேண்டியதென்றும் பாங்குகளில் பணம் செலுத்துவதின் கருத்து அத்தொகைகளை தங்களுக்கு வேண்டிய காலத்தில் வாங்குவதற்காகவேயன்றி வேறல்லவென்றும் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

32 சென்னை 68 சென்னை அபிஷல் அஸையனி அ. வாதி—ஸிமித் அ பிரதிவாதி



# லெட்டர்ஸ் அவ் அட்மினிஸ்டிரேஷன் ஆக்ட்டு.

லெட்டரஸ் அவ் அட்மினிஸ்டிரேஷன் ஆக்ட்டுப்படி ஜாமீன் கொடுத்தவர்கள் அந்த ஜாமீனை ரத்து செய்துகொள்ள முடியாதென்பது.

முசாமத்மங்கி யென்பவள் இறந்த தன் புருஷன் சொத்துக்களுக்குத் தான் வார்சென்பதாக லெட்டர்ஸ் அவ் அட்மினிஸ்டிரேஷன் அதிகாரம் கொடுக்கும்படி டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் மனுக்கொடுத்ததில் தகுந்த ஜாமீன் கொடுத்துவிட்டு சர்டிபிகேட் பெற்றுக்கொள்ளவேண்டியதென உத்திரவு செய்தார்கள். கண்டியாலால் என்பவர் ஜாமீன் கொடுத்ததின் பேரில் சர்ட்டிபிகேட் கொடுக்கப்பட்டது. அவ்விதம் சர்ட்டிபிகேட் கொடுபட்ட ஆறுமாதகாலங்களுக்குள் ஷை கண்டியாலால் தான் கொடுத்தஜாமீனை ரத்துசெய்யவேண்டுமென்றும், வேறு ஜாமீன் கொடுக்கச் செய்யும்படி ஷை முசாமத்மங்கி யென்பவளுக்கு உத்திரவு செய்யவேண்டுமென்றும், டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் மனுக்கொடுத்தார். அவ்விதஞ் செய்ய எவ்வித சட்டாதாரமுமில்லையென்று அம்மனு டிஸ்டிரிக்ட் கோர்ட்டாரால் தள்ளுபடி செய்யப்பட்டது. இது விஷயமாய் கண்டியாலால் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

அப்பீல் வாதிக்காக வக்கில் பாபுலால்பிட் மோஹன் பனர்ஜியவர்களும் அ. பிரதிவாதிக்காக வக்கீல் பாபு பிடால் பிறசாத் அவர்களும் ஆஜராகி ஜஸ்டிஸ் எய்க்மென் துரையவர்கள் ஜஸ்டிஸ் கராமத் உஸேன் அவர்கள் இவர்கள் முன்பாக விவாதங்கள் செய்ததில் லெட்டர்ஸ் அவ் அட்மினிஸ்டிரேஷனாக்ட்டுப்படி கொடுபட்ட ஜாமீனை ரத்து செய்ய டிஸ்டிரிக்ட் ஜட்ஜியவர்களுக்காவது ஹைகோர்ட்டாரவர்களுக்காவது எவ்வித அதிகாரமுமில்லையென்பதாக அ. வாதியின் அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

31 அலகபாத் கண்டியாலால் அ வாதி முசாமத்மங்கி அ. பிரதிவாதி

## வியாஜ்ஜியப் பொருமான சட்டம்.

...திஸரா சொத்தை மீட்கும் வழக்குகளை விசாரிக்க அதிகாரமுள்ள கோர்ட்டுகள் எவையென்பது

கேடர்நாத்சிங் வகைரு தங்களுக்குச் சொந்தமான பூஸ்திதி மேடாலாடல்சிங் வகைரு விடம் அனுபோக வொத்தியாக வைக்கப்பட்டிருப்பதாகவும், அந்த வொத்தித்தொகை ரூ. 1000மும் தாங்கள் கொடுக்கத்தயாராயிருப்பதாகவும் ஷை சொத்துக்கள் பிரதிவாதிகளிடமிருந்து தங்களுக்கு வசமாகவேண்டுமென்றும், ரூ. 9000க்கு வியாஜ்ஜியபொருமானங்கட்டி சப்கோர்ட்டில் வழக்கிட்டார். வாதிகளின் தாவா டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டில் செய்யப்படவேண்டுமென்று சப்ஜட்ஜியவர்கள் பிராதை வாப்ஸ் செய்துவிட்டார்கள். இவ்விதஞ் செய்தது சட்ட விரோதமானதென்று வாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்கள்.

வாதிகளுக்காக வக்கீல் முன்ஷிகோகுல் பிறசாத் அவர்களும் பிரதிவாதிகளுக்காக டபிள்யு வாலாச்துரையவர்களும் ஆஜராகி ஜஸ்ட்டிஸ் எய்க்மன் துரையவர்கள் ஜஸ்டிஸ் காராமட்வுஸ்ஸென் அவர்கள் இவர்கள் முன்பாக விவாதங்கள் செய்ததில் வாதிகளின் வழக்கை விசாரிக்க தமக்கு அதிகாரமில்லையென்றும், டிஸ்டிரிக்ட்முன்சிப்தான் அதற்கு அதிகாரமுடையவரென்றும் சப்ஜட்ஜியவர்கள் உத்திரவு செய்துவிட்டதால் டிஸ்டிரிக்ட் முன்சிப்பிடம் தாவா பிராது கொடுபட்டிருக்க வேண்டியதவசியமென்றும், அந்த கோர்ட்டுக்கு மேலதிகாரி டிஸ்டிரிக்ட் கோர்ட்டாகையால் அந்த கோர்ட்டில்தான் அப்பீல் செய்யப்படவேண்டுமென்றும், வாதிகள் கொடுத்த அப்பீலை டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் கொடுக்கும்படியாக வாப்ஸ் செய்துவிட்டார்கள்.

31 அலகபாத் 44 கேடார்நாத்சிங் வகைரு அ. வாதிகள்—மேடாலாடல்சிங் வகைரு அ. பிரதிவாதிகள்.



## லீகல்பிராக்டிஷனர் ஆக்ட்டு.

லாடவுட்டுகளென்று தீர்மானிக்கப்படும் உத்திரவுகளின் பேரில் அப்பீல் இல்லையென்பது.

கேடர்நாத் வகைரு 10 பேர்கள் லாடவுட்டுகளென்று மீரட் டிஸ்டிரிக்ட் ஜட்ஜியவர்கள் லீகல் பிராக்டிஷனர் ஆக்ட்டு 36வது செக்ஷன்படி தீர்மானங்கள் செய்து அந்த லாடவுட்டிகளின் பெயர் கண்ட ஜாப்தா தன்னுடைய கோர்ட்டிலும், தனக்குள்பட்ட சிவில் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளிலும், அந்த ஜில்லா ரெவனியு கோர்ட்டுகளிலும், ஒட்டப்படவேண்டுமென்று உத்திரவு செய்தார்கள். இதன் பேரில் கேடர்நாத் ஷை விசாரணை விஷயமாய் விடப்பட்ட சாக்ஷிகளை குறுக்கு விசாரணை செய்ய தனக்கு போதுமான அவகாசங் கொடுக்கவில்லையென்றும், ரெவனியு கோர்ட்டுக்கு டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் மேலதிகாரிகளல்லவாதலால் அந்த கோர்ட்டுகளில் ஷை ஜாப்தா வொட்டச்செய்ய அவர்களுக்கு அதிகாரமில்லையென்றும், டிஸ்டிரிக்ட் ஜட்ஜி செய்த வுத்திரவு தனக்கு முன்பாக செய்யப்படவில்லை யென்றும் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

அ. வாதிக்காக மிஸ்டர் இ. எ. ஹோவார்ட் துரை அவர்களும் கவர்ன்மெண்டு திரப்பில் அட்வொகேட் ஜனரல் அவர்களும் ஆஜராகி ஜஸ்டிஸ் எய்கமன்துரையவர்கள் ஜஸ்டிஸ் காராமட் உஸ்ஸென் அவர்கள் இவர்கள் முன்பாக விவாதங்கள் செய்ததில் டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் செய்த உத்திரவின்பேரில் அப்பீல் செய்ய சி. பு. கோடு ...வது செக்ஷன் அல்லது சி. பு. கோடு 622வது செக்ஷன் பொருத்தமில்லை யென்றும் ஹைகோர்ட்டு ஆக்ட்டு 15வது செக்ஷன் படி ஹைகோர்ட்டு ஜட்ஜிகளுக்கு கொடுபட்டிருக்கும் இயல்பான அதிகாரத்தின்படி லீகல் பிராக்டிஷனர்ஸ் ஆக்ட்டு ஏற்பட்டிருக்கிறதென்றும் அவர்களுக்குள்ள அதிகாரம் டிஸ்டிரிக்ட் கோர்ட்டாருக்கு கொடுபட்டிருப்பதால் அந்த 36வது செக்ஷன்படி செய்யப்படும் உத்திரவுகளின் பேரில் அப்பீல்

செய்ய சட்டமில்லையென்றும் அ வாதியின் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

31 அலகபாத் 59 கேடர்நாத் மனுவிஷயமாய்

## கிரிமினல் புரிவீஜர் கோடு.

பொய்ப்பிரமாணத்துக்கு எப்போது சாங்கிஷன் கொடுக்கவேண்டியது

திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் ஜட்ஜியவர்கள் முன்பாக விசாரணை நடந்த ஒரு காம்பன்ஸேஷன் கேசில் அய்யாக்கண்ணுப்பிள்ளை யென்பவர் 1907ஹ செப்டம்பர்மாதம் 17உ சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அப்போதே அவர் சொன்ன சாட்சியம் பொய்யென்றெண்ணத் தகுந்த காரணங்களிருந்தன. இந்தக் கேசில் 1907ஹ அக்டோபர்மீ 8உ தீர்ப்பு செய்யப்பட்டது. அந்த தீர்ப்புக்கு பிறகு ஷை அய்யாக்கண்ணுப்பிள்ளையை பொய்ப்பிரமாண முதலியனவற்றிற்கு ஏன் தண்டிக்கக்கூடாதென்பதற்குத் தகுந்த காரணங்களிருகளிருந்தால் தெரிவிக்கும்படி 1907 ஹ அக்டோபர் மீ 29உ கெடுக்கண்டு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அவரிடம் நவம்பர்மீ 15உ எக்ஸ்பளனேஷன் வாங்கிக்கொண்டு அவர் பேரில் இ. பி. கோடு 193, 471 இந்த செக்ஷன்களின்படி பொய்ப்பிரமாணத்திற்காகவும் சிருஷ்டினை செய்யப்பட்ட தஸ்தாவேஜியைபுண்மையென்று உபயோகித்ததற்காகவும் அவரைத் தெண்டிக்க நடவடிக்கைகள் நடத்தும்படி நவம்பர்மீ 16உ சாங்கிஷன் கொடுக்கப்பட்டது. இந்த சாங்கிஷன்கேஸ் திருநெல்வேலி டிப்டி மாஜிஸ்டிரேட்கோர்ட்டு 1908ம்ஹ த்திய 1-ம்நெ-ல் பயிலாகி விசாரணைக்குஎடுக்கப்பட்டதில் ஷை கேஸிலக்கண்ட சாங்கிஷன் கொடுக்க டிஸ்டிரிக்ட் ஜட்ஜிக்கு அதிகாரமில்லையென்றும் அதன் பேரில் எவ்வித நடவடிக்கைகளும் நடத்தக்கூடாதென்றும் எதிரி ஆட்சேபனை செய்தார்.

இந்த சாங்கிஷன் ஷை கேஸ் விசாரணை மத்தியகாலங்களிலாவது அந்த விசாரணைக்கு தொடர்ச்சியாகவாவதுகொடுப



## கிரிமனல் புரிவீஜர் கோடு.

2. பொய்ப்பிரமாணத்துக்கு எப்போது சாங்கிஷன் கொடுக்கவேண்டுமென்பது.

திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் ஜட்ஜியவர்கள் முன்பாக விசாரணை நடந்த ஒரு காம்பன்ஸேஷன் கேசில் அய்யாக்கண்ணுப்பிள்ளை யென்பவர் 1907-ஹ செப்டம்பர் மாதம் 17உ சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அப்போதே அவர் சொன்ன சாட்சியம் பொய்யென்றெண்ணத்தகுந்தக் காரணங்களிருந்தன. இந்தக்கேசில் 1907-ஹ அக்டோபர் மீ 8உ தீர்ப்பு செய்யப்பட்டது. அந்த தீர்ப்புக்குப் பிறகு ஷை அய்யாக்கண்ணுப்பிள்ளையை பொய்ப்பிரமாண முதலியனவற்றிற்கு ஏன் தெண்டிக்கக் கூடாதென்பதற்குத் தகுந்த காரணங்களிருந்தால் தெரிவிக்கும்படி 1907-ஹ அக்டோபர் மீ 29உ கெடுக்கண்டு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அவரிடம் நவம்பர் மீ 15உ எக்ஸ்பளனேஷன் வாங்கிக்கொண்டு அவர் பேரில் இ. பி. கோடு 193, 471 இந்த செக்ஷன்களின்படி பொய்ப் பிரமாணத்திற்காகவும் சிருஷ்டினை செய்யப்பட்ட தஸ்தாவேஜியை யுண்மையென்று வுபயோகித்ததற்காகவும் அவரைத் தெண்டிக்க நடவடிக்கைகள் நடத்தும்படி நவம்பர் மாதம் 16உ சாங்கிஷன் கொடுக்கப்பட்டது. இந்த சாங்கிஷன் கேஸ் திருநெல்வேலி டிப்டி மாஜிஸ்டிரேட் கோர்ட்டு 1908ஹ த்திய 1-நெம்பரில் பயிலாகி விசாரணைக்கு எடுக்கப்பட்டதில் ஷை கேசிலக்கண்ட சாங்கிஷன் கொடுக்க டிஸ்டிரிக்ட் ஜட்ஜிக்கு அதிகாரமில்லை யென்றும், அதன்பேரில் எவ்வித நடவடிக்கைகளும் நடத்தக்கூடாதென்றும், எதிரி ஆக்ஷேபனை செய்தார்.

இந்த சாங்கிஷன் ஷை கேஸ் விசாரணை மத்தியகாலங்களிலாவது அந்த விசாரணைக்கு தொடர்ச்சியாகவாவது கொடுபடாதிருந்ததால் அது செல்லும்படியுள்ளதா அல்லது செல்லாது என்ற விஷயங்களைத் தெரிவிக்கும்படி ஹைகோர்ட்டுக்கு ரெவரின்ஸ் செய்யப்பட்டது. அ. மனுதார் அய்யாக்கண்ணுபிள்ளைக்காக வக்கீல் வி. மாதவன் நாயர் அவர்களும்

கவுண்டர் மனுதாருக்காக பப்ளிக்பிராஸிகியூடர் அவர்களும் ஆஜரானார்கள். இதில் சட்டசம்பந்தமான சந்தேகங்களிருந்ததால் சீவ் ஜஸ்டிஸ் ஸர் ஆர்னால்டுவொயிட் துரையவர்கள், ஜஸ்டிஸ் வால்லிஸ் துரையவர்கள், ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்கள், ஜஸ்டிஸ் சங்கரநாயர் அவர்கள், ஜஸ்டிஸ் பின்ஹே துரையவர்கள் இவர்கள் கூடிய புல்பெஞ்சில் விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டதில், ஜட்ஜுகள் தங்கள் அதிகார வரம்பை கி. பு. கோடு 476-வது செக்ஷன்படி செலுத்துவதாக விருந்தால் அந்தந்த கேஸ் மத்தியிலாவது அதன் முடிவிலாவது அந்நடவடிக்கைகளுக்குத் தொடர்ச்சியானதென்று சொல்லத்தக்கதாக உடனேயாவது சாங்கிஷன் கொடுக்கவேண்டியதேயன்றி கேஸ் முடிந்தபின்பு சாங்கிஷன் கொடுப்பது சட்டப்படி செல்லாதென்று உத்திரவு செய்யப்பட்டது.

32 சென்னை 49 அய்யக்கண்ணும்பிள்ளை அ. மனுதார் சக்கரவர்த்தி அ. பிரதிவாதி

3. பொய்ப்பிரமாணத்துக்குக் கொடுக்கும் சாங்கிஷன் விஷயமாய் 2-வது அப்பீல் இல்லையென்பது.

பாரல்லி மாஜிஸ்டிரேட் முன்பாக நடந்த ஒரு கேசில் கன்னூலால் வகையறா பொய்பிரமாணங்கள் செய்திருப்பதாகவும், அவர்களை இ. பி. கோடு 193வது செக்ஷன்படி பொய்பிரமாணத்துக்குத் தெண்டிக்க சாங்கிஷன் கொடுக்கவேண்டுமென்றும், சடாயிலால் டிஷ மாஜிஸ்டிரேட்டாரவர்களிடம் மனுக்கொடுத்ததில் சாங்கிஷன் கொடுக்கத்தகுந்த காரணங்களில்லையென்று அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்பேரில் சடாயிலால் டிஸ்டிரிக்ட் ஜட்ஜியவர்களிடத்தில் அப்பில் செய்ததில் அவர் மனுப்படி எதிரிகளை தண்டிக்க சாங்கிஷன் கொடுக்கப்பட்டது. இந்த உத்திரவு ரத்துசெய்யப்படவேண்டுமென்று கன்னூலால் வகையறா ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்கள்.

அப்பீல் வாதிகளுக்காக வக்கில் பாபு சத்திய சந்திர முகார்ஜியவர்களும், அப்பீல் பிரதிவாதிக்காக வக்கீல் பாபு



சிதால்பிரசாத்கோஷ் அவர்களும், ஆஜராகி ஜஸ்டிஸ் எய்க்மன் துரையவர்கள் ஜஸ்டிஸ் காராமட் உஸ்ஸேன் அவர்கள் இவர்கள் முன்பாக விவாதங்கள் செய்ததில் கி. பு. கோடு 195வது செக்ஷன்படி ஒரு கோர்ட்டாரால் சாங்கிஷன் கொடுக்கப்படும்பட்சத்தில் அந்த சாங்கிஷன் நடவடிக்கை விஷயமாக ஒரே அப்பீல் செய்யசட்டமிருக்கிறதேயன்றி இரண்டாவது அப்பில் செய்ய சட்டமில்லையென்று 30 சென்னை 382 ரூலிங்கை கவனித்து உத்திரவு செய்யப்பட்டது.

31 அலகபாத் 48 கன்னூலால் வகையறா அ. மனுதாரர்கள் சடாமியாலால் கவுண்டர் மனுதார்.

4. பொய்ப்பிரமாணஞ்செய்த அப்புரூவரைத்தெண்டிக்க யாரால் சாங்கிஷன் கேட்கப்படவேண்டுமென்பது.

மூன்றுபேர் சேர்ந்து ஒருவரைக்கொலை செய்து விட்டதாக அவர்கள் கடப்பை ஜில்லா மதனபல்லி சப்மாஜிஸ்டிரேட் அவர்களால் செஷன் கோர்ட்டுக்கு கமிட் செய்யப்பட்டார்கள். இந்தக் கேசில் மடிகா நல்லவாடு என்பவன் அப்புரூவராக விசாரிக்கப்பட்டான். இந்த 1907 வது செஷன் கேஸ் 42நில் டிஷ நல்லவாடு கீழ் கோர்ட்டில் சொன்ன வாக்குமூலத்துக்கு விரோதமாக சொன்னான், அதாவது கீழ் கோர்ட்டில் 2 3. எதிரிகள் சேர்ந்து இறந்தவனைக் கொன்றதாகச் சொல்லி செஷன் கோர்ட்டில் 2 எதிரிமட்டில் இறந்தவனைக் கொன்றதாகச் சொன்னான். இதன் பேரில் இந்த மடிகா நல்லவாடுவை இ. பி. கோடு 193வது செக்ஷன்படி தெண்டிக்கும்படி செஷன் ஜட்ஜியவர்கள் சாங்கிஷன் கொடுத்து விட்டார்கள்.

இந்த கேஸ் டிப்டி மாஜிஸ்டிரேட்டாரவர்களுடைய விசாரணைக்கு அனுப்பப்பட்டதில் இந்தகேஸ் கி. பு. கோடு 337 (3) படி ஹைகோர்ட்டாரவர்களுடைய சாங்கிஷனன்னியில் விசாரிக்கப்படக்கூடாதென்று செஷன் ஜட்ஜிக்குத் தெரிவித்துவிட்டார்கள். இதன்பேரில் செஷன் ஜட்ஜி டிஷ கேசைப்பற்றி விசாரிக்க ஹைகோர்ட்டாரவர்களுடைய சாங்கிஷன் வேண்டியது அனாவசியமென்றும், அந்தவிஷயத்துக்காக

அப்புருவருக்கு மன்னிப்பு (பார்டன்) கொடுக்கப்பட்டதோ அவ்விஷயத்தை அவன் சொல்லாமற்போனாலும் அது விஷயமாய் தெண்டிக்க ஹைகோர்ட்டாரவர்களுடைய அனுமதி வேண்டியதவசிய மென்றும் வேறுவிஷயங்களைப்பற்றி அனுமதி பெறவேண்டுவதில்லையென்றும், தனது அபிப்பிராயங்களை வெளியிட்டு டிப்டி. மாஜிஸ்டிரேட்டாரவர்களுடைய கோறுதலை தெரிவித்தார்கள்.

இந்த ரெவரென்ஸ் ஜஸ்டிஸ் மன்ரோ துரையவர்கள் ஜஸ்டிஸ் மிஸ்டர் சங்கரநாயர் அவர்கள் இவர்கள் முன்பாக விசாரணைக்கு எடுக்கப்பட்டதில் ஆக்டிங்பப்ளிக் பிராஸிகியூடர் அவர்கள் ஆஜராகி வாதித்தார்கள்.

இவ்வித கேஸுகளில் சாங்கிஷன் கேட்கவேண்டிய பாத்தியம் பப்ளிக் பிராஸிகியூடருக்கு இருக்கிறதேயன்றி மற்றெவருக்கும் பாத்தியமில்லையென்று செஷன்ஸ் ஜட்ஜியவர்களின் கேட்டுக்கொள்ளுதல் நிராகரிக்கப்பட்டது.

32 சென்னை 47 சக்கரவர்த்தி— மடிகாநல்லவாடு

5. சேர்க்கக்கூடாத குற்றங்களைச் சேர்த்து நடவடிக்கைகள் நடத்துவதும் நியாயத்தவறுதல்கள் இல்லாமையும்.

குஜராட் நகரத்தில் நடைபெற்றுவந்த குஜராட்டி பாஷையிலுள்ள இந்து சுயராஜ் பத்திரிகைக்கு ஆசிரியரும் அச்சிடுவிப்போரும் பிரசுரிப்பவருமான திருபுவனதாஸ் புருஷோத்தம்தாஸ் இவர்கள் தங்கள் பத்திரிகைகளில் 1908௵ எப்பிரல்மீ 4உ "இங்கிலீஷ்க்காரர்கள் பேடிகளுக்கு பயப்படுகிறார்கள்." என்ற வியாசத்திலும் ஷை எப்பிரல்மீ 11உ "முக்கியமான எச்சரிப்பு" என்ற வியாசத்திலும் இராஜத்துரோகமான வார்த்தைகள்வரைந்திருப்பதாக இ.பி. கோடு 124A, 153A, இந்த ஸெக்ஷன்களின்படி குற்றஞ்சாட்டி பம்பாய் சீப் பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டாரவர்கள் முன்பாக விசாரணைக்கு கொண்டுவரப்பட்டார். அந்த விசாரணையில் இவ்விந்தியா இராஜரீகத்தைப் பலரும் வெறுக்கத்தக்க வார்த்தைகளை எதிரிகள் உபயோகித்ததாகவும், உபயோகிக்கனத்தனப்பட்டதாகவும், மாட்சிமைதங்கிய இந்தியா சக்கிரவர்த்தியவர்களுடைய குடிகளாகிய ஐரோப்பியர்களை இத்தேசத்து குடிகள் வெறுக்கத்தக்க வார்த்தைகளை அவர்கள் உபயோகித்ததாகவும் கண்டுபிடித்து எதிரிகளுக்கு இரண்டுவருடக்காலங் கடுங்காவல் தெண்டனை விதித்தார்கள்.



இதைப்பற்றி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் எதிரிகளுக்காக பாரிஸ்டர் பாப்டிஸ்டா அவர்களும் கவர்ண்மெண்டு திரப்பில் ஆக்டிங் அட்வொகேட்ஜெனரல் பிரான்ஸன் துரையவர்களும் ஆஜராகி ஜஸ்டிஸ் சந்திரவார்க்கர் அவர்கள் ஜஸ்டிஸ் ஹீடன்துரையவர்கள் இவர்கள் முன்பாக விசாரணைக்கு எடுக்கப்பட்டதில் எதிரிகள் அடியிற்கண்டபடி சட்ட சம்பந்தமான ஆக்ஷேபணைகள் செய்தார்கள்.

(1). குற்றஞ்சாட்டியது சட்டத்துக்கு நேர்விரோதமானதாக விருக்கிறது, பரிசீலனையில் நியாயவிரோதங்களிருக்கின்றன.

(2). இ. பி. கோடு 123A. 153A. இந்த இரண்டு செக்ஷன்களின்படிக்கும் குற்றஞ்சாட்டியதில் குற்றஞ்சாட்டப்பட்ட வியாசங்களில் எந்த வாசகங்கள் எந்த செக்ஷன்படி குற்றமாகிறதென்பதை தெரிவிக்காததால் எதிரிக்கு வாதை அல்லது அபாயம் நேரிடக்கூடியதாகவிருக்கிறது.

(3). எப்பிரல்மீ 4, 11உ இந்த இரண்டு தேதிகளில் நடந்ததாகச் சொல்லுங் குற்றங்களை யொன்றாகச் சேர்த்து விசாரித்தது சட்டவிரோதம் (கி. பு. கோடு 233' 234.)

அவைகள் ஒவ்வொன்றிற்கும் அடியிற்கண்ட சமாதானங்கள் சொல்லப்பட்டன.

1வதுக்கு சமாதானம்:—விசாரணைக் குறைவென்று சொல்வது ஒரு சாதாரண பிசகு; அந்தப் பிசகினாலாவது, தவறுதலினாலாவது எதிரிகள் தப்பெண்ணங்கொள்ளவிடமில்லையானையால் இன்னின்ன விஷயங்கள் சொல்லியிருப்பது குற்றமென்று சொல்லாதிருப்பது நியாயத்தவறுதல் அல்லது விரோதமாகமாட்டாது. அதற்கு கி. பு. கோடு 225 வதுசெக்ஷனே பரிகாரமாகச் சொல்லவேண்டும்.

2வதுக்குசமாதானம்:—எதிரிகள் பேரில் குற்றஞ்சாட்டிய

முழு பாகங்களும் தெரிவிக்கப்பட்டிருப்பதால் அவைகளில் எவைகுற்றமாகு மென்பதை எதிரிகள் தெரிந்து கொண்டே யிருக்கவேண்டும்.

3. வழக்குசமர்ப்பணம்:—தனித்தனியாக வேற்பட்டகுற்றங்களை யொன்றாகச்சேர்த்து விசாரிப்பது சட்டக்கருத்துகளுக்கு விரோதமானதல்ல, குற்றபத்திரிகைகளிற்கண்ட வாசகங்களுக்கு விரோதமானவைகளுமல்ல, அவைகளினால் நியாயத்தவறுதல்கள் இடையாது.

இந்த எதிரிகளை விடுதலை செய்யத்தகுந்த காரணங்களில்லாததால் கீழ்க்கோர்ட்டு தீர்ப்பு உறுதிசெய்யப்பட்டது.

33 பம்பாய் 77 சக்கிரவர்த்தி—திருபுவனதாஸ் புருஷோத்துமதாஸ்.

## பினல்கோடு

1. கலகஞ்செய்கிறவர்களுக்குள் பொதுவான நோக்கமின்னதிருந்ததென்பதை கண்டுபிடித்துத் தீர்ப்பு செய்யவேண்டியதவசியமில்லையென்பது.

முடிசாமியும் இன்னும் 10 12, பேர்களும் ஒருமகருலை அறுவடைசெய்து கொண்டிருந்தார்கள். அந்த நிலம் எற்கனவே விவாதமாயிருந்த ஸ்தலம். தசரத மகாபத்திரர் அவ்விதம் அறுத்ததைத் தடைசெய்தார். அந்தடையை மீறி முருகசாமி வகைரு அறுவடைசெய்ததின்பேரில் தசரதமகாபத்திரர் தன்னுடைய ஆட்கள் முப்பதுபேர்களை ஆயுதங்களுடன் திருவித்து முருகசாமி வகைரவை யெதிர்த்து அவர்களில் சிலருக்குக் காயமுண்டு பண்ணிவிட்டார். இதனால் தசரதமகாபத்திரர் முதலானவர்கள் பேரில் இ. பி. கோடு 147 வது செக்ஷன்படி குற்றஞ்சாட்டி பாலகூர் டிப்டிமாஜிஸ்டிரேட் அவர்களால் தெண்டிக்கப்பட்டார்கள். இத்தீர்ப்பில் எதிரிகளின் பொதுவான நோக்கம் அவர்களுடைய பாத்தியம் அல்லது அவர்கள் கொண்டாடுகிற பாத்தியம் இவைகளை பூர்ஜிதப்படுத்த வேண்டியதாகையால் கலகங்கள் செய்ததாகக் கண்டிருந்தது. எதி-



ரிகள் கலகஞ்செய்ததின் பொதுவான நோக்கம் இன்னதென்று நிஜமாய்ப்பிக்கப்படாததால் எதிரிகளுக்கு விதித்த தெண்டனை ரத்து செய்யப்படவேண்டுமென்று டிஸ்டிரிக்ட் ஜட்ஜிடம் அப்பீல் செய்ததில் அவ்வப்பீல் அன்னுபடி செய்யப்பட்டது, அதனால் எதிரிகள் இது விஷயமாய் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள்.

எதிரிகளுக்காக வக்கீல் மிஸ்டர் மோன்னார்துரையவர்கள் ஆஜராகி ஜஸ்டிஸ் ராம்பினிதுரையவர்கள் ஜஸ்டிஸ்வுார்புடன் அவர்கள் இவர்கள் முன்பாக விவாதங்கள் செய்ததில் சாவாநிலம் முருகசாமியின் மாமனுருக்கு கோர்ட்டுமூலமாக வசப்படுத்தப்பட்டிருக்கிறதென்றும், எதிரிகள் ஸ்வாதீனதிலேயிருக்கவில்லையென்றும் எதிரிகள் தங்களுடைய அல்லது தாங்கள் கொண்டாடுகிற பாத்தியங்களை முன்னிட்டு பலாத்காரமாக ஸ்வாதீனஞ்செய்ய உத்தேசித்ததே அவர்களின் பொதுவான நோக்கமென்றும், அந்நோக்கத்திற்கு விபரந்தெரியவேண்டியபூ துவசியமில்லையென்றும், 22 கல்கத்தா 276, 33 கல்கத்தா 295 இந்த ரூலிங்குகளை யனுசரித்து எதிரிகளின் அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

36 கல்கத்தா 158 தசரதமகாபத்திரர். அ. வாதி—முருகசாமி அ. பிரதிவாதி.

2. தகப்பன் பெயர் மாருட்டமாக கையெழுத்து செய்யும் தஸ்தாவேஜி போர்ஜரியாக மாட்டாதென்பது.

வீரன்னகுடும்பன் என்பவன் 1906 வருஷத்தில் இறந்தான். அவனுக்கு எவ்வித சந்ததியுமில்லாததால் அவர் சொத்துக்களை அவர் விதந்து அடைக்கம்மையடைந்து அநுபவித்துவந்தாள். இந்த வீரன்னனுக்கு பாகம்பிரிந்த சகோதரனுடைய குமாரன் ருமன்குடும்பன் ஒருவனிருக்கிறான். இவன் ஷை வீரன்னனுக்குக் குமாரன் என்பதாகவும், அவனுடைய சொத்துக்கள் தன்வசமிருப்பதாகவும். அச்சொத்துக்களை ருமன் ஒருவருக்கு பெந்தகம் வைத்துக் கடன்வாங்கிவிட்டார். இதுவிஷயம் ஷை விதந்துவுக்குத் தெரியவந்ததின்பேரில் ஷை ருமன் பொய்கையெழுத்து செய்ததற்காக

போர்ஜரி குற்றஞ்சாட்டி பிராதுகொடுத்து நடவடிக்கைகள் நடத்தினாள். இந்த கேஸ் திருநெல்வேலி செஷன் கோர்ட்டு 1908 ௵ 5 நெல். ஜட்ஜி ஸி. ஜி. ஸ்பென்ஸர் துரையவர்களால் விசாரிக்கப்பட்டதில் ராமன் தன ஸ்வீகார பாத்திரதையை ஸ்தாபிக்கவேண்டிய நிமித்தம் பிராதில்கண்ட பத்திரஞ்செய்தாரென்றும், அது போர்ஜரியாகாதென்றும் விடுதலை செய்யப்பட்டார். செஷன் ஜட்ஜியவர்கள் செய்த தீர்மானம் நியாய விரோதமானதென்று அடைக்கம்மை ஹை கோர்ட்டில் ரெவிஷன்மனுக் கொடுத்தாள்.

இது சட்டசந்தேக சம்பந்தமான கேசாக விருந்ததால் ஜஸ்டிஸ் மன்றோதுரையவர்கள் ஜஸ்டிஸ் பின்ஹேதுரையவர்கள் ஜஸ்டிஸ வால்லஸ துரையவர்கள் இவர்கள் கூடிய புல்பெஞ்சில் விசாரணைக்கு எடுக்கப்பட்டதில், இ. பி. கோடு 464 செக்ஷன் விளக்கம் 1-ல் ஒருவன் தன் கையெழுத்தை தானே செய்வதும் போர்ஜரி குற்றமாகுமென்று சொல்லப்பட்டிருப்பதால் எதிரி செய்தது இந்த செக்ஷன்படி குற்றமாகுமென்று ஜஸ்டிஸ பின்ஹேதுரையவர்கள் மட்டில் அபிப்பிராயப்பட்டார்கள், மற்றஜட்ஜிகள் இருவரும் எதிரி செய்தது குற்றமாகாதென்றும், இறந்தவீரன்னன் எதிரிக்கிசித்தப்பனாகையால் அவன் சொத்துக்களையுடையவனாமென்று வீரன்னன் குமாரன் ராமன் என்று கையெழுத்து செய்தாரேயன்றி வேறொருவர் கையெழுத்தையும் செய்யவில்லையென்றும், அவ்விதஞ்செய்தது குற்றமாகாதென்றும் கீழ்க்கோர்ட்டார் எதிரியை விடுதலை செய்தது நியாயமானதென்றும், அப்பீல்வாதியின் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

23 தேதி 90 அடைக்கம்மை—ராமன்.

142391